பக்கங்கள்: 12+IV= பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 30 வெள்ளிக்கிழமை (14-03-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:108

# ஜப்பான் பேச்சுக்களில் கலந்து கொள்வதா?

# தலைவருடன் ஆலோசித்த பிறகே முடிவு





நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் ஹெலிகொப்டரில் கிளிநொச்சிக்கு வந்து இறங்குவதை முதல் படத்திலும், அவருடன் வருகைதந்த நோர்வே தூதர் ஜோன் வெஸ்பேர்க்கை அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் சு.ப.தமிழ்ச்செல்வனும் வரவேற்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

## ஹெல்கிஸனை சந்தித்த பின்னர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச் 14

அடுத்த வாரம் ஜப்பானில் நடைபெறவிருக்கின்ற பேச்சுக்களை பகிஷ்கரிக்காமல் அதில் கலந்துகொள்ளுமாறு நோர்வே அரசு எங்களைக் கேட்டிருக்கிறது. நோர்வேயின் இந்த வேண்டுகோள் பற்றி தலைவருடன் கலந்தாலோசித்த பிறகே முடிவு எடுக்கப்படும்.

பெரும்பாலும் தலைவர் எங்களைப் பேச்சுக்கு அனுப்பிவைப்பார் என்றே நம்புகிறேன்.

நேற்று கிளிநொச்சியில் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனுடன் பேச்சு நடத்திய பிறகு அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து தங்களின் வர்த்தகக் கப்பலை ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்கி அழித்த சம்பவத்தினால் சீற்றமடைந்திருக்கின்ற புலிகள், ஜப்பானில் நடைபெறவுள்ள அடுத்த கட்டப் பேச்சுக்களை பகிஷ்கரிப்பது உட்பட பதில் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றனர். இந்தச் சமயத்தில் நேற்று கிளிநொச்சிக்குச் சென்ற நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய நெருக்கடியை நீக்கும் முக்கிய பேச்சுக்கள் ஜப்பானில்

### கிளிநொச்சியில் செய்தியாளர்களிடம் ஹெல்கிஸன்

கிளிநொச்சி,மார்ச் 14

திருகோணமலைக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் கடற்படையினரால் தாக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து உருவாகியுள்ள நெருக்கடி நிலைமையைச் சீராக்குவதற்கு எடுக்கப்படவேண்டிய செயற்பாடுகள் குறித்து ஜப்பானில் அடுத்த வாரம் நடைபெறும் பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்படும்.

- இப்படிக் கூறினார் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன்.

கிளிநொச்சியில் நேற்றுப் பிற்பகல் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகருடன் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திருகோணமலைக்கு அப்பால் விடுதலைப் புலிகளின் கப்பல் இலங்கைக் கடற்படையால் தாக்கப்பட்ட



சம்பவத்தால் விடுதலைப் புலிகள் பெரும் அதிருப்தி நிலையில் உள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பான் பேச்சுக்களைப் பின்போடுவது குறித்து புலிகள் எமக்கு அறிவிக்கவில்லை

### அதனால் திட்டமிட்டபடி நடக்கும் என்கிறார் அமைச்சர்

கொழும்பு,மார்ச் 14

ஜப்பானில் எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள புலிகளுடனான 6 ஆவது சுற்றுச் சமாதானப் பேச்சுகளை பின்போடுவது தொடர்பாக புலிகள் எமக்கு அறிவிக்கவில்லை. அதனால் பேச்சுக்கள் திட்டமிட்டபடி நடக்கும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## 'வெற்றிமனை' திட்டத்தை ஹெல்கிஸன் தொடக்கி வைத்தார்

கிளிநொச்சி,மார்ச் 14

பெண்களுக்கு உளவளத் துணை வழங்கும் 'வெற்றிமனை' திட்டத்தை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் நேற்றுக் கிளிநொச்சியில் ஆரம்பித்து வைத்தார்.

'வெற்றிமனை' கட்டடத்திற்கான அடிக்கல்லை அவர் அங்கு நட்டார்.

உளநிலை பாதிக்கப்பட்ட பெண்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக 'சிரான்' உபகுழுவின் சிபாரிசுக்கமைய இத்திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வந்த பிரதி அமைச்சர் ஹெல்கிஸன் விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் பேசுவதற்காக நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்டதற்கு ஆட்சேபம்

## வவுனியாவில் பூரண ஹர்த்தால் முழு நகரமுமே ஸ்தம்பித்தது!

### கடையடைப்பைத் தவிர்க்க பொலீஸார் மேற்கொண்ட தீவிர முயற்சி தோல்வி

வவுனியா,மார்ச் 14

விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் இலங்கைக் கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்டதை ஆட்சேபித்தும், அந்தச் சம்பவத்தில் உயிரிழந்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் நேற்று வவுனியாவில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால், வவுனியா நகரமே முற்றாக ஸ்தம்பித்தது.

நகரத்தில் முழுக் கடையடைப்பைத் தவிர்ப்பதற்கு பொலீஸார் எடுத்த முயற்சி தோல்வியில் முடிவுற்றது.

வவுனியா நகரம் முன்னெப்போதும் இல்லாத வகையில் இந்த ஹர்த்தாலின் போது முற்றாகச் செயலிழந்து ஸ்தம்பித்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹர்த்தாலுக்கான அழைப்பு விடுக்கப்பட்டதை அடுத்து, கடையடைப்பைத் தவிர்ப்பதற்கு நேற்றுமுன்தினம் பிற்பகல் முதல் பொலீஸாரும்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ அச்சுறுத்தல் பற்றி புலிகள் நேற்று முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மார்ச் 14

குடாநாட்டில் கடந்த சில தினங்களாக இராணுவத்தினர் மேற்கொள்கின்ற அச்சுறுத்தல் நடவடிக்கைகள் பற்றி விடுதலைப் புலிகள் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டிருக்கின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் உள்ள

(11 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச சட்டங்களை கடற்படை மீறவில்லை

### அமைச்சர் பீரிஸ் சொல்கிறார்


கொழும்பு,மார்ச் 14

முல்லைத்தீவுக் கடலில் புலிகளின கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தில் கடற்படையினர் சர்வதேச சட்டப் பிரமாணங்களையோ அல்லது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையோ மீறவில்லையென்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அமைச்சர் பீரிஸ் தொடர்ந்து கூறுகையில், படையினருக்கு யாரும் உத்தரவிடத் தேவையில்லை நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வேண்டியது அவர்களின் பொறுப்பு இதைத் தான் அவர்கள் செய்துள்ளனர். இத் தாக்குதல் சம்பவம் குறித்து இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஒரு தீர்ப்பை வழங்கும் என்றார். (ஜ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரையும் அரசியல்துறைப் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசிய சமயம் எடுக்கப்பட்ட படங்கள் இவை. பெண்களுக்கான உளவளத்துணை நிலையமான வெற்றிமனைத் திட்டத்தை ஹெல்கிஸன் அடிக்கல் நட்டு ஆரம்பித்து வைப்பதையும் படத்தில் காணலாம்.

# ஜூன் 9ஆம், 10ஆம் திகதிகளில் ஜப்பானில் உதவிவழங்கும் கூட்டம்

கொழும்பு,மார்ச்14

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் ஜப்பானில் நடைபெறும்போது ஜப்பான், நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் போன்ற நாடுகள் தலைமைதாங்கும். இக்கூட்டம் ஜூன் மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதேவேளை, ஜப்பான் விசேட தூதுவர் யசூசி அகாஷி இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி குறித்து இக் கூட்டத்தில் ஆராய்வார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,

ஆசிய அபிவிருத்தி வங்கியின தலைவர் டடா ஒச்சினோ கடந்தவாரம் இலங்கை வந்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் கே.என். சொக்ஸி ஆகியோரைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். வருடாந்தம் 20 கோடி ரூபாவை ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு வழங்கும்.

இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் அடுத்த வருடம் முதல் அபிவிருத்திப் பணிகளுக்கு 40 கோடி ரூபா தேவைப்படும். இது குறித்து நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவருடன் பேச்சு நடத்தினார். அத்தொகையை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கித் தலைவர் இணக்கம் தெரிவித்தார்.

- இவ்வாறு அவர் சொன்னார். (ஐ)

# 'சீடா' நிதி நிறுவனத்தின் உதவியுடன் இளைஞர்-யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி

## யாழ். அரச அதிபரின் கோரிக்கைக்கு சாதகமான பதில்

யாழ்ப்பாணம்,மார்ச்14

குடாநாட்டில் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சிகளை வழங்கும திட்டமொன்றினை முன்னெடுப்பதற்கு 'சீடா' நிதி நிறுவனம் முன்வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் குடாநாட்டுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த 'சீடா' நிறுவன கனடாத் தலைமையகத்தைச் சேர்ந்த திருமதி கதறின் மற்றும் கொழும்புத் தலைமையகத்தைச் சேர்ந்த ஜோசப் ஆகியோரிடம் யாழ். அரச அதிபர் வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே அவர்கள் இந்தத் தொழிற்பயிற்சித் திட்டங்களை முன்னெடுப்பதற்கு சம்மதம் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

யுத்தத்தினால் சீரழிந்து போயிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்குரிய வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றபோதிலும், இங்கு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு போதியளவு தொழில் வல்லுநர்கள் இல்லை என்றும் -

இளைஞர், யுவதிகளுக்கு தொழில பயிற்சிகளை வழங்குவதன் மூலம குடாநாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை திறமையாக மேற்கொள்ளமுடியும் என்றும் - 'சீடா' அதிகாரிகளிடம் அரச அதிபர் சுட்டிக்காட்டினார் என்றும் -

இதனை ஏற்றுக்கொண்ட 'சீடா' அதிகாரிகள் உடனடியாக இதற்கான மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டு விரைவில் பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதாக உறுதியளித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரச அதிபருடனான சந்திப்பைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரியைச் சந்தித்த 'சீடா' அதிகாரிகள் 'சீடா'வின் நிதி ஒதுக்கீட்டில் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களையும் பார்வையிட்டனர்.

(எ-4)


எஸ்.பி.என்ரப்பிறைசஸ்

காலம் : 14-03-2003 நேரம் : காலை 7.00 - 8.00 வரையான சுபநேரத்தில் ஆரம்பித்து வைக்கப்படும்

எம்மிடம்

உள்ளூர், சர்வதேச (I.D.D), இணைப்பு (Connecting calls)

அழைப்புக்கள் துல்லியமாகவும் துரிதமாகவும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சர்வதேச அழைப்புக்கள் 10/= இலிருந்து 15/=க்குள் பெற்றுக் கொள்ளலாம்.

S.P. Enterprises

Communication, Stationary, Travels & Tours


# கற்பிட்டி கடற்றொழிலாளர்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## தீவுகளிலுள்ள நீர்கொழும்பு மீனவர்களின் எச்சரிக்கைக்கு ஆட்சேபம்

கற்பிட்டி,மார்ச்14

கற்பிட்டி கடற்றொழிலாளர்கள் நேற்று பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர். நீர்கொழும்பிலிருந்து கற்பிட்டிக்கு வந்த சகல பஸ்களையும் பயணிகளுடன் திருப்பியனுப்பிய அவர்கள், கற்பிட்டியிலிருந்து தீவுகளுக்கு உணவு மற்றும் பொருள்களை எடுத்துச் செல்லும் படகுகளையும் தடுத்துநிறுத்தினர்.

கற்பிட்டிப் பகுதியிலிருந்து கடற்றொழிலுக்குச் செல்லும் 'லைலா' வலைத்தொழிலாளர்கள் அத்தொழிலை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று கற்பிட்டி எல்லைக்குட்பட்ட தீவுகளிலுள்ள நீர்கொழும்பு பிரதேச மீனவர்கள் எச்சரிக்கை விடுத்திருப்பதை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாக கற்பிட்டியிலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. கற்பிட்டி எல்லைக்குட்பட்ட தீவுகளான பத்தலங்குண்டு, கோயில்முனை ஆகியவற்றில் வந்து தங்கியிருந்து நீர்கொழும்பு பிரதேச மீனவர்கள் தொழில்செய்கின்றனர்.

எச்சரிக்கையை மீறி 'லைலா' வலைத்தொழிலை மேற்கொண்டால் கடலில் வைத்து படகுகளைத் தீவைத்து கொழுத்துவதாகவும் அம் மீனவர்கள் கூறியுள்ளனர். கற்பிட்டி கடல் வளத்தைப் பண்படுத்தியே அந்தத் தீவுகளில் உள்ளவர்கள் தொழிலைச் செய்துவருகின்றனர். கற்பிட்டி வளத்தை நீர்கொழும்பில் இருந்து வந்த இவர்கள் மட்டும் பயன்படுத்திக் கொண்டு கற்பிட்டியில் உள்ளவர்களை தொழிலைச் செய்யவேண்டாம் என்று கூறுவது எந்த விதத்தில் நியாயம் என்று கற்பிட்டி கடற்றொழிலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள் கற்பிட்டித் தீவுப் பகுதிகளில் இருந்து வெளியேறிய அடுத்த நிமிடமே கற்பிட்டியில் உள்ள சகல 'லைலா' வலைத் தொழிலாளர்களும் தங்களின் தொழிலைக் கைவிடுவார்கள் எனக் கூறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடத்தினர். (எ)

# நோர்வே பிரதியமைச்சர் ஹெல்கிஸன் இன்றும், நாளையும் தெற்கே விஜயம்

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் இன்று மொறட்டுவைக்கும் நாளை எம்பிலிப்பிட்டியவுக்கும் விஜயம் செய்வார்.

இன்று காலை 9மணிக்கு மொறட்டுவைக்கு விஜயம் செய்யும் நோர்வே பிரதியமைச்சர் அங்கு 'டேல் டிசைன்' நிலையத்தைத் திறந்துவைப்பார்.

நாளை காலை 10 மணிக்கு எம்பிலிப்பிட்டியவுக்கு விஜயஞ்செய்யும் அவர், அங்கு கிராமிய பாதை திட்டமொன்றையும் இலங்கை நோர்வே கூட்டு முயற்சி திட்டமொன்றையும் பார்வையிடுவார்.

# நெடுமாறனின் ஆதரவாளர் சாகுல் ஹமீது பொலிஸில் சரண்! 20 வரை விளக்கமறியல்

சென்னை,மார்ச்14

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் ஆகியோர் விடுதலைப்புலிகளை ஆதரித்து பேசுவதற்கான பொதுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த சாகுல் ஹமீது (வயது 50), கடந்த செவ்வாயன்று பொலிஸாரிடம் சரணடைந்தார்.

சென்னையைச் சேர்ந்த இவர் 'தமிழ் முழக்கம்' பத்திரிகையின் வெளியீட்டாளராவார். நெடுமாறனின் ஆதரவாளரான இவர் விடுதலைப் புலி ஆதரவுக் கூட்டமொன்றை சென்னையில் [illegible] என்று ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டிருக்கிறார்.

[illegible] தேடப்பட்டு வந்த இவர் சரணடைந்ததை அடுத்து கைது செய்யப்பட்டு உடனடியாக அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

பின்னர் பூந்தமல்லியிலுள்ள விசேட பொடா நீதிமன்றத்தில் அவர் ஆஜர் செய்யப்பட்டார். எதிர்வரும் 20 ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ஐ)

# அடகு நகைகள் நாளைமுதல் ஏலத்தில்

மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வதிக் கிளையிலும் நெல்லியடிக் கிளையிலும் 31.12.1984 வரை அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என மக்கள் வங்கி யாழ்.பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.ஸ்ரான்லி வீதிக்கிளையில் வைத்து இந்த நகைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

நாளை சனிக்கிழமை முதல் 19ஆம திகதிவரை யாழ்.பிரதானவீதிக் கிளையில் அடகுவைத்த நகைகளும் -

20 ஆம் திகதிமுதல் 23 ஆம் திகதி வரை நெல்லியடிக்கிளையில அடகு வைத்த நகைகளும் விற்பனை செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.(எ)








# இலங்கையின் தலைவிதி இந்தியாவின் கைகளில்

மற்றுமொரு பெரும் எதிர்பார்ப்பிற்குரிய ஆட்டம் இன்று. இதில் மூன்று அணிகளின் உச்ச உணர்ச்சிகளின் சங்கமம் இருக்கிறது.



பயிற்சியின் போது பிளமிங்.

இலங்கையும் நியூஸிலாந்தும் அரையிறுதிக்குச் செல்வதற்கான போராட்டம். இந்தியாவுக்கோ நியூஸிலாந்து மண்ணில் ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க வேண்டும் என்ற அவா. மூன்று அணிகளுக்குமே வெற்றி முக்கியம். ஆனால், ஆடப்போவது என்னவோ இரு அணிகள் மட்டுமே. அவர்களை விட ஒவ்வொரு பந்துக்கும் உச்சப் பதற்றத்தில் இருக்கப் போகிறவர்கள் இலங்கை வீரர்கள்.

இந்த ஆட்டத்தில் நியூஸிலாந்து வென்றுவிட்டால் இலங்கையர்களின் அரையிறுதிக் கனவு கொடூரமாகக் கலைக்கப்பட்டுவிடும். இப்போது அவர்களின் தலைவிதி இந்தியர்களின் கைகளில். இந்த ஆட்டத்தை வென்று இலங்கை அரையிறுதிக்கு நுழைவதற்காக இந்தியர்கள் கைகொடுத்துத் தூக்கி விடுவார்களா என்பதே கேள்வி?

உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னர் நியூஸிலாந்துக்கு சுற்றுப் பயணம் செய்திருந்த இந்தியா, அங்கு மிகமோசமான தோல்வியை சந்தித்திருந்தது. அதற்காக வழமைபோன்று கடுமையான விமர்சனங்களை வாங்கிக்கட்டிக் கொண்டது.



பயிற்சியின் போது யுவராஜ்.


உலகக் கிண்ண ஆரம்பத்தில் நெதர்லாந்துடன் சிறப்பாக ஆடாமலும் பின்னர் அவுஸ்திரேலியாவுடன் மோசமாகத் தோற்றும் மீண்டும் சிக்கலில் மாட்டிக் கொண்டது இந்தியா. ஆனால், அதன் பின்னர் அணி தன் முழுத்திறனையும் வெளிப்படுத்தி வெற்றிகளைப் பெற்று வருகின்றது. ஏற்கனவே அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.

இறுதி ஆட்டத்துக்குச் செல்வது என்பதும் அதற்கு இலகுவானது போன்றது என்றுதான் தோன்றுகின்றது. அது அரையிறுதியில் சந்திக்க வேண்டிய அணி கென்யா. ஏற்கனவே 'சுப்பர் சிக்ஸி'ல் கென்யாவை வென்றுள்ளது இந்தியா. இப்போதுள்ள திறனில் இந்தியாவைக் கென்யா வெல்லும் என்பதை நினைக்க முடியாது. எனவே, இந்தியா இறுதியாட்டத்துக்குச் செல்லும் என்பது அனேகமாக உறுதி. ஏதாவது அதிசயம் நடந்தாலொழிய அது சாத்தியமானது.

ஆனாலும், இந்தியாவுக்கு இது கௌரவப் பிரச்சினை. எப்படியாவது நியூஸிலாந்து மண்ணில் பெற்ற தோல்விக்கு பழி தீர்க்க கங்கணம் கட்டிக் கொண்டுள்ளது அது. இந்தியாவை சொந்த மண்ணில் தோற்கடித்த நினைவுடன் அரையிறுதிக்கு எப்படியாவது சென்று விடவேண்டுமானால் இந்த ஆட்டத்தில் வெல்லவேண்டும் என்ற நிலையில் நியூஸிலாந்தும் காத்துக் கொண்டிருக்கின்றது.

இந்தியாவின் ஆரம்பத்துடுப்பாளர் சச்சின் அவர்களின் முக்கிய இலக்கு என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

(10ஆம் பக்கம் பார்க்க)



இப்படியா ஆகவேண்டும் எங்கள் நிலை. இப்போது விதியின் கையில் எங்கள் முடிவு!




SHARP Action of the day



பயிற்சியில் இந்திய அணித் தலைவர் கங்குலி, அருகே கைவ்.

பிரவுன்ஸ் எலக்ரோனிக்ஸ்
BROWNS ELECTORINICS Browns

# கென்யா அரையிறுதியில்

கேப்டவுன்,மார்ச்14

கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் நேற்று முனதினம் புளும்பொன்ரேய்ன் மைதானத்தில்



ஸிம்பாப்வேயை வென்ற மகிழ்வில் கென்ய அணியினர்.

நடைபெற்ற ஸிம்பாப்வே - கென்யா அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் கென்யா வெற்றிபெற்றதை அடுத்து இலங்கை அணி அரையிறுதிக்குச் செல்வது கேள்விக்குறியாகி உள்ளது. அதேநேரம் கென்யா அரையிறுதிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

டெஸ்ட் அந்தஸ்துப் பெறாத அணி ஒன்று உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிக்குத் தெரிவுசெய்யப்பட்டமை இதுவே முதல்தடவை.

முதல் சுற்றின் முடிவில் 10 புள்ளிகளுடன் 'சுப்பர் சிக்ஸ்'க்கு தெரிவு

(10ஆம் பக்கம் பார்க்க)

# அரையிறுதி ஆட்டம் நடக்கும் மைதானத்தில் சோதனை!

போர்ட்எலிஸபெர்த்,மார்ச்14

உலகக்கிண்ணப் போட்டித் தொடரின் அடுத்த கட்டமான அரையிறுதி ஆட்டங்கள் நடைபெறும் மைதானங்களில் ஒன்றான போர்ட் எலிஸபெர்த் நகரிலுள்ள செல் ஜோர்ச் பார்க் மைதான ஆடுகளத்தைப் பரிசோதிக்குமாறு கிரிக்கெட் உலகக்கிண்ண போட்டிகளின் இயக்குநர் அலி பக்கர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை அவுஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டம் இந்த மைதானத்திலேயே நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் மிகக் குறைந்த எண்ணிக்கையான ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதனால் இம் மைதானம் சிறந்ததொரு ஆட்டத்திற்கு சாதகமற்று இருக்கின்றதா? என்பதை ஆராயுமாறு அலிபக்கர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அறிக்கையொன்றில் அவர் கூறியுள்ளதாவது:-

நான் பரிசோதனை மேற்கொள்ளுமாறு பணித்தது கிழக்கு மாகாண



கிரிக்கெட் சபையையோ அல்லது மைதான ஊழியர்களையோ குறைகாணுவதற்காக அல்ல. ஆனால், மிகச்

(10ஆம் பக்கம் பார்க்க)

# கென்யாவின் வெற்றியால் இலங்கை திகைப்பு

ஸிம்பாப்வே அணிக்கெதிராக கென்யா பெற்ற 7 விக்கெட் வெற்றி, இலங்கை அணியை திகைப்பில் ஆழ்த்தியுள்ளது.

இவ்வெற்றியின்மூலம் அரையிறுதிக்கான வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொண்டது கென்யா.

இந்நிலையில், இந்திய அணியை நியூஸிலாந்து அணி, தோற்கடித்துவிட்டால் இலங்கை தொடரிலிருந்து வெளியேறிவிடும்.

கென்யா - ஸிம்பாப்வே போட்டியின் பின்னர் இலங்கை அணியின் பயிற்றுநர் டேவ் வட்மோர் கருத்துத் தெரிவிக்கையில்,

"நான் தற்போது மிகவும் மனம் தளர்ந்துவிட்டேன். இப்போட்டியின் இறுதிப் பகுதியைத்தான் நான் பார்த்தேன். சகல பெருமைகளும் கென்ய அணிக்கானவையே. அவர்கள் அதற்குத் தகுதியானவர்கள்.

எமது வீரர்களில் சனத் ஜயசூரியாவிடம் மட்டுமே இது குறித்து நான பேசினேன். அவரும் மிகவும் கவலையடைந்துள்ளார்.

- இவ்வாறு வட்மோர் கூறியுள்ளார்.

நியூஸிலாந்தை இந்தியா தோற்கடிப்பதன் மூலம் இலங்கை அணிக்கு அரையிறுதி வாய்ப்பு நீடித்திருக்கும் எனவும் வட்மோர் நம்பிக்கை தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)







# மனம் மகிழ வாழ்த்துகின்றோம்

J/133 கிராம உத்தியோகத்தர்



## திரு.வைரமுத்து சந்திரராசா

அவர்கள் ஆனைக்கோட்டையில் 23வருடங்களாக மக்கள் தேவைகளை உணர்ந்து அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் இவருக்கு கிராம உத்தியோகத்தர் தரம்I இற்கு பதவி உயர்வு கிடைத்தமையையிட்டு மன மகிழ்வுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு என்றும் இவரது இனிய சேவை எமக்குக் கிடைப்பதற்கு இறைவன் அருள்புரிய வேண்டுகின்றோம்.

கிராம முன்னேற்றச் சங்கத்தினர்,
ஆனைக்கோட்டை.

(15512)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



குலவிளக்காம் அம்பாளின் அருள்ஒளியும்
உசன் கந்தன் கருணையும் கைவரப்பெற்று
எம்மண்ணின் மைந்தனும்
யாழ்.இராமநாதன் மகாவித்தியாலய
பழைய மாணவரும்
சமூக நலன்விரும்பியுமாகிய

## உயர்திரு.குகதாசன் ஈஸ்வரதாசன்

அவர்கள்சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு மகிழ்ச்சி கொள்வதோடு அவரது சேவை என்றென்றும் இளம்பிறைபோல் நலம் பெருக எமது ஆசியும், பாராட்டுக்களும் உரித்தாகுக!

உசன். (15515) உசன் வாழ் மக்கள்.


## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,மார்ச்14

தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறுகிறது.

பாடசாலையின் அதிபர் மு.சொர்ண லிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் க.நாகராசா கலந்துகொள்ள வுள்ளார். (ஒ-9)

## வடமராட்சி வலயத்தில் கணிதபாட செயற்றிட்டத்துக்கு பாடசாலைகள் தெரிவு

வடமராட்சி,மார்ச்14

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் நடத்தப்படவுள்ள தரம் IIஇற்கான கணித பாட செயற்றிட் டத்திற்கு, வடமராட்சி கல்வி வலயத் தில் 18பாடசாலைகள் தெரிவுசெய் யப்பட்டுள்ளன.

மருதங்கேணி கோட்டத்தில் தரம் IIவகுப்புகள் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-182)


### பரீட்சை தவணை - 1

2003-முதலாந்தவணைப்பரீட்சை ஆரம்பம் : 16.03.2003 ஞாயிறு
முதலாம், இரண்டாம், மூன்றாந் தவணைப்பரீட்சைவினாத்தாள்கள் தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவும்.
(பரீட்சையும் எழுதலாம்)

(15534)

சயன்ஸ் அக்கடமி, நல்லூர்
(முருகன் கோவில் முன்பாக)



### வட இலங்கை சங்கீத சபையினர் நடத்தும் · சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்

# 156ஆவது ஆராதனை விழா - 2003

இடம் : யா/வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயம்
காலம் : 16.03.2003
நேரம் : காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 3.30 வரை

மேற்படி சபை அங்கத்தவர்கள், சங்கீத அபிமானிகள் வருகைதந்து சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

திரு.ப.விக்னேஸ்வரன்
தலைவர்

(சி-26921)

திரு.அ.தற்பரானந்தன்
செயலாளர்



# PRESIDENT



PRESIDENT CFL
பல்புகள் தற்போது இலங்கை தர நிர்ணய சபையின் (SLSI) சிறந்த மின்சார சேமிப்பை உறுதிபடுத்தும் நட்சத்திர தராதரத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது, என்பதை பெருமையுடன் அறியத்தருகிறோம்.

அத்துடன் இலங்கை மின்சார சபையின் இலகு தவணை திட்டத்திலும் கிடைக்கும்

80% சேமிப்பு

ஒரு வருட உத்தரவாதம்

நாடெங்கும் கிடைக்கும்

ISO 9002

போலிகள் தொடர்பாக விழிப்பாயிருங்கள்


# உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

**தினம் ஒரு பரிசு - 33**

இலங்கை அணி அரையிறுதிக்குச் செல்லுமா?

முழுப்பெயர் : ..........................................
முகவரி : ..........................................
அ. அட்டை எண்: ..........................................

இக்கேள்விக்கான விடையை இதே கூப்பனில் எழுதி நாளை (15.03.2003) நண்பகல் 1 மணிக்குள் தினம் ஒரு பரிசு - 33, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பலாம் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் நேரில் சேர்க்கலாம். உடனே விரையுங்கள்.

உதயன்

‘அருண்ஸ்’ பரிசுக் கூப்பன்களை வெல்வதற்கான கேள்விகள் விரைவில்






### உதயனின் கிரிக்கெட் கொண்டாட்டம்

கிரிக்கெட் உலகக் கிண்ணம் - 2003

**மாபெரும் இறுதிப் போட்டி**

1. இறுதியில் கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது?
(..................................)
2. இறுதியாட்டத்தின் ஆட்டநாயகன் யார்?
(..................................)

உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
முடிவு திகதி மார்ச் 15

முழுப்பெயர் : ..........................................
முகவரி : ..........................................
அ.அட்டை எண்: ..........................................

**தினம் தினம் ஒரு பரிசு:**

ஆட்டம் நடைபெறும் நாளுக்கு முதல் நாள் கேட்கப்படும் கேள்விக்கு நீங்கள் விடையளிக்க வேண்டும். சரியான விடை எழுதுபவருக்கு ஏசியன் நிறுவனம் வழங்கும் 1000ரூபாவுக்கான 50கழிவுக் கூப்பன் கிடைக்கும்.

**விசேட பரிசுக் கூப்பன்கள்:**

முக்கிய ஆட்டங்களின்போது மேலதிகமாக ஒரு கேள்வி கேட்கப்படும். அதில் வெல்லும் அதிர்ஷ்டசாலிக்கு அருண்ஸ் ஸ்போட்ஸ் பொட் வழங்கும் 500 ரூபா பெறுமதியான பரிசுக் கூப்பன் கிடைக்கும்.

**மாபெரும் இறுதிப் போட்டி:**

இது பெரும் பரிசுகளைக் கொண்டது. வெல்லும் 3 அதிர்ஷ்டசாலிகள் 1ஆம், 2ஆம், 3ஆம் பரிசுகளைப் பெறுவர். ஆறுதல் பரிசுகளாக 10 இருவழி விமானப் பயண ரிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன. இதற்கான முடிவு திகதி மார்ச் 15 ஆகும்.

**விதிகள்:-**

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம், போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம், உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்கள், அவர்களது குடும்பத்தவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள், நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது, முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. அனைத்து முடிவுகளும் மார்ச் மாதம் 27ஆம் திகதிய உதயனில் அறிவிக்கப்படும்.

உதயன்

## குலையும் நம்பிக்கையும் குறையாத உறுதியும்

கடந்த திங்களன்று ஆழ்கடலில் விடுதலைப் புலிகளின் கப்பல் ஒன்று கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தை அடுத்து சமாதான முயற்சிகள் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகியிருப்பது 'உள்ளங்கை நெல்லிக்கனி' யாகத் தெரிகின்றது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் தற்போதைய சமாதான நடவடிக்கைகளில் முன்னெப்போதும் இல்லாத பின்னடைவு - நெருக்கடி- இக்கட்டு - இப்போது ஏற்பட்டிருப்பது துலாம்பரமாக அனைவருக்கும் தென்படுகின்றது.

சமாதான முயற்சிகள் அடிபட்டுப்போய் மீண்டும் பேரழிவு யுத்தம் என்ற அந்தகார இருள் நமது நாட்டைச் சூழ்ந்துவிடுமோ என்ற அச்சம் பலருக்கு.

இவற்றுக்கு மத்தியில் இரு தரப்புத் தலைவர்களும் வெளியிட்டிருக்கும் கருத்துக்கள் நம்பிக்கை ஒளிக்கீற்றை நமக்குக் காட்டியிருக்கின்றன; மனத் தைரியத்தைத் தந்திருக்கின்றன.

எவ்வளவு தூரம் ஆத்திரமூட்டப்பட்டாலும் அவசரப்பட்டு தாங்கள் யுத்தத்துக்குப் போக மாட்டார்கள் என்பதை புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் தெட்டத்தெளிவாகத் தெரிவித்திருக்கின்றார்.

"புலிகள் யுத்தத்துக்குப் போகவேண்டும் என்றோ, பதில் தாக்குதல் நடத்தவேண்டும் என்றோ மக்கள் விரும்பவில்லை. எனவே, நாம் அவசரப்பட்டு யுத்த வழியை நாடமாட்டோம். கடற்படையினரின் தாக்குதல் நடவடிக்கைகளினால் சமாதான முயற்சிகள்மீது தமிழ் மக்கள் வைத்திருந்த நம்பிக்கை குறைந்து வருகின்றது. நம்பிக்கை குலைந்து போனாலும் சமாதானச் சூழ்நிலையை நாம் தொடர்ந்து பேணுவதையே மக்கள் விரும்புகின்றார்கள். எனவே, எவ்வளவு பொறுமையாக இருக்கமுடியுமோ அவ்வளவு பொறுமையாக இருந்து சமாதான முயற்சிகளைத் தொடர்வோம்; மக்கள் விருப்பப்படி செயற்படுவோம்" - என்று விளக்கியிருக்கிறார் அன்ரன் பாலசிங்கம்.

எந்த நெருக்கடி ஏற்பட்டாலும், எந்த மட்டத்தில் ஆத்திரமூட்டப்பட்டாலும் தமிழ் மக்களின் விருப்பத்திற்கே முன்னுரிமை கொடுத்துச் செயற்படுவோம் என்ற புலிகளின் நிலைப்பாட்டை உறுதியாக வெளியிட்டிருக்கின்றார் அவர்.

அதேபோன்று, சமாதான நடைமுறைகளின் மீது தென்னிலங்கை மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை வீண்போகாமல் பலனளிப்பதற்குத் தாம் தொடர்ந்து செயற்பட உறுதிபூண்டிருப்பதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

சமாதான சூழ்நிலை தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் நேற்றுமுன்தினம் கண்டியில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றிய சமயமே இந்த உறுதிப்பாட்டை மீண்டும் வெளிப்படுத்தினார் ரணில்.

"எத்தகைய சவால்களை எதிர்கொள்ள வேணடி வந்தாலும் மீண்டும் போருக்குப் போக மாட்டோம்; இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை எட்டும் வரை நாம் ஓயப்போவதில்லை" - என்று அவர் சூளுரைத்திருக்கிறார்.

"புலிகளின் கப்பல் அழிப்பு விவகாரம், பிரச்சினையான விடயந்தான். இதுபோன்ற எத்தகைய தடைகள் வந்தபோதும் சமாதான முயற்சிகளைக் கைவிடப் போவதில்லை; எக்காரணங்கொண்டும் மீண்டும் போரை முன்னெடுக்கப் போவதுமில்லை" - என்றும் அவர் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

இத்தகைய அறிவிப்புக்கள் கலக்கமுற்றிருக்கும பொதுமக்களின் மனதில் பால் வார்ப்பனவாக அமைந்திருக்கின்றன.

இதுபோன்ற அறிவிப்பில் காட்டும் உறுதி, சமாதானம் தொடர்பான செயற்பாடுகளிலும் - பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டிவளர்க்கும் நடவடிக்கைகளிலும் - காட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

முப்படையினரையும் பொலீஸாரையும் தனது அரசின் முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை பிரதமர் உறுதிசெய்துகொண்டால்தான், பரஸ்பர நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்கு அரசு - புலிகள் இரு தரப்பிலும் வெளிப்படுத் தப்படும் வேணவா, நடைமுறைச் சாத்திய மாகும்.

## கீரிமலை மண்டப புனரமைப்புக்கு உதவ அமைச்சரிடம் கோரிக்கை

வலிகாமம் தெற்கு,மார்ச்14

கீரிமலையில் அமைந்துள்ள பிதிர்க்கடன் கிரியைகள் நடைபெறும் மண்டபத்தைத் திருத்துவதற்குத் தேவையான நிதியை வழங்குமாறு இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கீரிமலையில் கிரியைகளை மேற்கொள்ளப் பாதுகாப்பு படையினர் அனுமதி வழங்கியுள்ளதைத் தொடர்ந்து தினமும் அதிகளவு மக்கள் இறந்தவர்களுக்கு பிதிர்க்கடன்களைச் செலுத்தும் கிரியைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் போர் அனர்த்தங்களால் சிதைவுண்டு காணப்படும் இம்மண்டபத்தில் கிரியைகளை நடத்த மக்கள் சிரமப்பட வேண்டியுள்ளது.

எனவே, இம்மண்டபத்தைப் புனரமைக்கத் தேவையான சுமார் ஒரு லட்சம் ரூபாவை எமது பிரதேச சபை நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்ய முடியாதிருப்பதால், இந்து கலாசார அமைச்சு நிதியில் இருந்து ஒதுக்கீடு செய்து தருமாறு தமது கோரிக்கையில் பிரதேச சபையினர் குறிப்பிட்டுள்ளனர்.

(ஒ-152)

### மாதர் மான்மியம்

**சொன்னது என்னாச்சு!**

நங்கை நீ அழகு கொட்ட
தடுக்கினில் கிடந்த மண்ணை
மங்கையாய் பருவம் எய்தி
மகிழ்வுடன் நடந்த மண்ணை
எங்கு நான் சென்ற போதும்
என்னுள்ளம் மறவா தென்றாய்!
இங்கு நீ வந்து சென்று
இருபது ஆண்டு ஆச்சு
நங்கை உன் கைபிடித்தவனும்
நாவுசொல் தமிழ் அறியான்
எங்கனம் உன் போன்றோரால்
எழில் தமிழ் ஏற்றம் காணும்?

\- விகடகவி.

## பொது நூலகத்தை கணனிமயப்படுத்த 'யுனெஸ்கோ' ரூ.2 கோடி வழங்கும்!

### செய்தியாளர் மாநாட்டில் நிறுவனப் பிரதிநிதி தகவல்

யாழ்.பொதுநூலகத்தை கணனிமயப்படுத்தி நவீன மயமாக்கவும், ஒரு தொகுதி நூல்களை கொள்வனவு செய்வதற்கும் 'யுனெஸ்கோ' நிறுவனம் 2கோடி ரூபாவை வழங்க விரும்புகின்றது' என்று அந்த நிறுவனத்தின் பிரதிநிதி பிருதிவிராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்.'றான்' விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.பொதுநூலகத்தில் பணியாற்றவுள்ள நூலகர்கள் மற்றும் உதவியாளர்களின் கணனி அறிவை விருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதேவேளை - நூலகத்தை கணனிமயப் படுத்துவதற்கும் அதன் கட்டமைப்புக்களை விரிவுபடுத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

அத்துடன், யாழ்ப்பாண ஊடகவியலாளர்களுக்கு கணனிப் பயிற்சிகளை வழங்கும் வகையில் அவர்களுக்கென தகவல் தொழில்நுட்ப மையம் ஒன்றினை அமைப்பதற்கும் 'யுனெஸ்கோ' திட்டமிட்டுள்ளது.

யாழ்.சிற்றி ஹோலில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சித் திட்டத்திற்கு ஒருகோடியே 80 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றைவிட யாழ்ப்பாண மக்களின் பாரம்பரியங்களை - கலை கலாசாரம் என்பவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கான திட்டம் ஒன்றினையும் 'யுனெஸ்கோ' முன்னெடுக்கவிருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலம் யாழ்.மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இவற்றுக்கெல்லாம் 'யுனெஸ்கோ' நிறுவனம் போதிய நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

எனினும், இவற்றுக்கெல்லாம் முக்கியமானதாக இருப்பது நாட்டின் 'சமாதானம்' ஆகும். இங்கு அமைதி நிலை நிரந்தரமாக ஏற்பட்டால்தான் எமது இந்த முற்போக்கு நடவடிக்கைகள் சிறப்பாக அமையும்.

இந்தியாவிலிருந்து களோஸ்கி என்பவரை எமது நிறுவனம் இங்கு அழைத்து வந்திருக்கிறது. அவரைக் கொண்டு இங்கு 'வாழும் கலை' என்ற மன அமைதியை ஏற்படுத்தக்கூடிய பயிற்சி வழங்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியிலும் யாழ்.மக்கள் கலந்துகொண்டு பயன்பெற வேண்டும் - என்றார் அவர். (எ-4-5)

## குடத்தனை, மணற்காடுப் பகுதிகளில் கடல் தண்ணீர் உட்புகும் அபாயம்!

### சுற்றுச் சூழல் சங்கம் அரச அதிபருக்கு மகஜர்

வடமராட்சி கிழக்கு,மார்ச்14

வடமராட்சி கிழக்கில் தற்போது மணல் அகழ்வு இடம்பெறும் குடத்தனை - மணற்காட்டுப் பகுதியில் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்படவுள்ளது.

எனவே, கட்டடத் தேவைகளுக்காக மணல் அகழ்வதற்கு வேறு இடத்தைத் தெரிவுசெய்யவும்.

இவ்வாறு வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் சங்கம் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் சங்கம் யாழ்.அரச அதிபருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆய்வாளர்களின் சிபார்சுப்படி தற்போது மணல் அகழப்படும் இடத்தில் இன்னமும் 800 உழவு இயந்திரசுமை மணலை மட்டுமே அகழமுடியும்.

அதற்குமேல் மணல் அகழப்படுமானால் கிராமங்களுக்குள் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்படுமென எச்சரிக்கப்பட்டுள்ளது.

மணல் அகழ்வது முற்றாக நிறுத்தப்படுமானால் யாழ்.குடாநாட்டின் அபிவிருத்தி வேலைகள் பாதிப்படையும்.

எனவே, புதிதாக மணல் அகழக்கூடிய இடம் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ளதனால், அப்பகுதியில் மணல் அகழ்வு செய்யப்படுவதற்கு அனுமதியைப் பெற்றுத்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ-182)

**வெள்ளவத்தையில் கடந்த செவ்வாயன்று**

## தமிழ்ப் பெண்ணின் சங்கிலி அபகரிப்பு பட்டப்பகலில் துணிகரக் கொள்ளை!

**இரண்டு மாதங்களில் ஏழாவது சம்பவம்**

வெள்ளவத்தையில் மற்றொரு தமிழ்ப் பெண்ணின் தங்கச் சங்கிலி பட்டப்பகலில் கத்திமுனையில் அபகரிக்கப்பட்ட சம்பவமொன்று கடந்த செவ்வாயன்று இடம்பெற்றுள்ளது. வெள்ளவத்தை ஹம்டன் வீதியில் பாடசாலைச் சிறுமி ஒருவரைக் கூட்டிக்கொண்டு தனியாகச் சென்றுகொண்டிருந்த தமிழ்ப் பெண்ணிடம், 'ஓட்டோ' ஒன்றில் வந்த இனந்தெரியாத கும்பல், கத்தியைக் காட்டி சங்கிலியை அபகரித்துக்கொண்டு மாயமாகியுள்ளது.

இரண்டு மாதங்களுக்குள் வெள்ளவத்தையில் இடம்பெற்ற ஏழாவது கொள்ளைச் சம்பவம் இது.

'உதயன்', 'சுடரொளி' நிறுவனங்களின் ஊழியர் விநோதினி திலீபன் கொள்ளையர்களின் கொடூரத்துக்குள்ளாகி ஐந்து நாள்கள் முடிவுற்றநிலையில் அதே பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விநோதினியின் கொலை தொடர்பாக பொலீஸார் கொலைஞர்களை சல்லடை போட்டு தேடுதல் மேற்கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையில், இரண்டாவது சம்பவம் இடம்பெற்றிருப்பது பொலீஸாருக்கு கொள்ளையர்கள் விடுக்கும் சவாலாகவே அமைந்துள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தங்கச் சங்கிலியை பறிகொடுத்த பெண்மணி வெள்ளவத்தை பொலீஸில் முறைப்பாடு செய்து தப்பிச் சென்ற ஓட்டோவின் நிறம், அதன் இலக்கம் ஆகியவற்றைத் தெரிவித்தபோதிலும் இதுவரை சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

சனசந்தடி நிறைந்த இடங்களில் பட்டப்பகலில் கொள்ளையர்கள் மேற்கொள்ளும் துணிகர கொள்ளைகள் காரணமாக இப்பகுதி தமிழ் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.(ஐ)

### நாளை

பங்குனி 01
சனிக்கிழமை
(15.03.2003)
திதி : துவாதசி
முன் இரவு 9.50 வரை.
நட்சத்திரம்: பூசம்
காலை 7.20 வரை.
சுபநேரம் : 3.21 - 4.51
ராகுகாலம்: 9.21 - 10.51
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

பொறுமை சிறந்தது தான். அதற்காக தகுதியற்றவர்களிடம் பொறுமையை கடைப்பிடிக்காதீர்.

## கல்லுண்டாய் உப்பளப் பகுதியில் கட்டுப்பாடற்ற மணல் அகழ்வு

### தடுத்துநிறுத்த மக்கள் கோரிக்கை

நவாலி,மார்ச்14

கல்லுண்டாய் உப்பளப் பகுதியில் மீண்டும் சட்டவிரோதமாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இதனால் அப்பகுதியிலுள்ள வயல் நிலங்களில் கடல்நீர் உட்புகும் ஆபத்து ஏற்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னரும் பல தடவைகள் கட்டுப்பாடின்றி மணல் அகழ்வது குறித்து பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியதைத் தொடர்ந்து மணல் அகழ்வு கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இது சம்பந்தமாக நவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் இவற்றைத் தடுத்து நிறுத்த உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி சண்டிலிப்பாய் பிரதேச செயலருக்கும் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கும் மகஜர்கள் அனுப்பி வைத்துள்ளனர். (ஒ-100)

### எங்கள் துயரைத் தீர்ப்பீரே!

*கருப்பையில் வளரும் சிசுவுக்கும்*
*கல்லினுள் வாழும் தேரைக்கும்*
*விருப்புடனே உண வளிக்கும்*
*அன்பு குன்றா வள்ளல் நீ!*
*வண்ணை நகரில் எழுந்திருக்கும்*
*வைத்ய நாதப் பெருமானே!*
*நண்ணித் தினமும் கைதொழுவோம்*
*எங்கள் துயரைத் தீர்ப்பீரே!*

\- கவிமணி கந்த முருகேசதாசனார்.

(வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய பதினைந்தாம் நாள் திருவிழா இன்று)

# 14-03-2003 இல் அகவை அறுபது ஆனதும் இளைப்பாறும் அதிபரின் சேவையை மறவோம்!



## உயர்திரு. கதிர்காமு செல்வநாயகம் (S.L.P.S.-2-1)

(அதிபர், யா/வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்)

பிறந்த திகதி: 15-03-1943
முதல் நியமனம்: 05-01-1975

1) நு/டிம்புல அரசினர் த.க.பாடசாலை 05.01.1975 - 31.12.1977
2) யா/ஆசிரியர் கலாசாலை, கொழும்புத்துறை 01.01.1978 - 31.12.1979
3) நு/டிம்புல அரசினர் த.க.பாடசாலை 01.01.1980 - 14.03.1985
4) யா/வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம் 15.03.1985 - 10.11.1988 வரை ஆசிரியர்
5) யா/வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம் 11.11.1988 - 14.03.2003 வரை அதிபர்

அன்பும் அறிவும் அமைதியும் கொண்டு
பண்புடன் மிளிரும் அதிபர் ஐயா
செல்வ நாயகமெனும் செம்மலே நீரும்
எங்கள் பாடசாலையில் இணைந்து உழைத்த
பதினெட் டாண்டுகள் பறந்தேவிட்டன
எண்பத் தைந்தில் இலங்குமா சிரியராய்
எம்முடன் சேர்ந்து உழைத்தீ ரன்றோ
மூன்று வருடங்கள் முடிந்த வுடனே
உமது திறமையால் உயரதிப ரானீர்
பதினைந் தாண்டுகள் அதிபரா யிருந்து
பணிபல செய்தீர்
புதிய கட்டடம் அமைத்த தோடு
வருடா வருடம் விளையாட்டுப் போட்டி
நடத்தி மாணவருக்கு உற்சாக மூட்டினீர்
கழுத்துப் பட்டி சட்டைச் சின்னம்
இவற்றுடன் மாணவர் மிளிர்ந்திடச் செய்தீர்
புலமைப் பரிசிற் பரீட்சை தன்னில்
கணிசமானோர் தேறிடச் செய்தீர்

உங்கள் துணிவும் அயரா உழைப்பும்
எங்கள் மத்தியில் உயர்வினைத் தந்தன
துரிதமாய்க் கடமைகள் துடிப்புடன் செய்தீர்
பெற்றோர் பழைய மாணவ ரோடும்
ஆசிரியர் நலன்விரும்பிகள் அனைவ ரோடும்
மாணவர் தம்முடனும் மகிழ்வொடு நடந்து
பாடசாலை சமூகத்தின் பாராட்டைப் பெற்றீர்
அறுபது அகவை பூர்த்தி யாயினும்
ஐயா உங்கள் சேவையை மீண்டும்
விரும்பியே உள்ளோம் வாழ்கபல் லாண்டு
வண்ணார் பண்ணை ஸ்ரீ வைத்தி லிங்க
வித்தியாலயம் உள்ளவரையும்
உமை மறவாது உள்ளத் திருத்தும்
அகவை அறுபது ஆனதும்
இன்று இளைப்பாறும்
உங்கள் சேவையை என்றும் மறவோம்
வாழ்க பல்லாண்டு வையக மீதென
வாழ்த்தியே கொள்கிறோம் வாழ்கபல் லாண்டே!

*யா/வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்,*
*ஆனைக்கோட்டை.*
(15517)
ஆசிரியர், மாணவர்,
பாடசாலைச் சமூகம்.


## கூரை அமைப்பில் புதிய அலை
## அன்டன் சுபர் ஷெல்டா

குடியிருப்பு விவசாய மற்றும் வர்த்தகக் கட்டிடங்களுக்கு உகந்ததவை




அன்டன் சுபர் ஷெல்டா
சரியாகப் பொருத்துங்கள்

உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துவோர்
சென்று அந்தனீஸ் ரூவ்பிங் (பிரைவேட்) லிமிட்டெட்
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொ.பே. 324261-5, 337283-5 - பெக்ஸ்: 446554

Super Shelta
உங்களின் கூரைக்குப் பரிகாரம்

Access Graphics



## Araliya International

நிறுவனத்திடமிருந்து மேலும் ஒரு அறிமுகம்

அரலிய இருக்கை

இலங்கையில் முதன் முறையாக



மூல உருவமைப்புடன் கட்டுப்படியான விலையில்
குஷன்களுடன் புத்தம் புதிய இருக்கைகள்

### இருக்கைகளில் ஒரு புரட்சி!

தரமான உற்பத்திகள் - மிகப்பிந்திய தொழில்நுட்பம்

* வாகனங்களுக்கான இருக்கைகளும், கவர்களும்.
* பேருந்து இருக்கைகள்
* மோட்டார் சைக்கிள் இருக்கைகள்.
* முச்சக்கரவண்டி இருக்கைகள்.

வித்தியாசத்தை நீங்களே உணர்வீர்கள்

ARALIYA INTERNATIONAL
No. 76, Industrial Estate Katuwana Road, Homagama.
தொலைபேசி. 894848, 074 408630 / 442634.
தொலைமடல். 074 408631
காட்சியறை :
இல. 296/1 B, ஹை லெவல் றோட (...)


## விடுதிக்காப்பாளர் பதவிக்கான வேலைவாய்ப்பு அறிவித்தல்

நவஜீவனம் சிறுவர் பராமரிப்பு நிறுவனத்திற்கு விடுதிக்காப்பாளர் தேவை.

தேவையான தகைமைகள்.

- கல்வித் தகைமை:- க.பொ.த (உ/த) சித்தி
- வயதெல்லை:- 25 - 40 வருடங்கள் (ஆண்)
- சம்பளம்:- நேரில் பேசித் தீர்க்கப்படும்.

விண்ணப்பதாரி கிறீஸ்தவ மதத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். *(றோ.க. உட்பட)*

உணவும் தங்குமிட வசதியும் இலவசமாக வழங்கப்படும். சுயவிவரத்துடன் கூடிய விண்ணப்பங்கள் 31.03.2003 இற்கு முன்னர் கீழ் வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

நிர்வாகி,
**நவஜீவனம்** *தருமபுரம், பரந்தன்.*
(சி-26930)

## நனையும் எங்கள் விழிகளில் ஐயாவின் 31ஆம் நிறைவு நாள் நினைவுகள்



அமரர்
## நாகர் கணபதிப்பிள்ளை

இருவருக்கு அமுதாக 1920-02-13
இறைவனுக்கு அருகாக 2003-02-12

காலைக் கதிரவனில் மாலை வரும் முழுநிலவில்
சோலை வளர்துளிரில் சொக்க வைக்கும் பூ மலரில்
ஐயா நாம் உங்களைத்தான் ஆசையாய்க் காணுகிறோம்
பொய்க்காமல் எமது கண்ணில் தரிசனம் தந்திடுங்கள்.

2003.02.12 அன்று எம்மையும் எமது மண்ணையும் விட்டகன்று சிவகணத்துள் அமரரான **நாகர் கணபதிப்பிள்ளை** அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் இன்று (14.03.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது, இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*விளையாட்டு அரங்க வீதி,*
*கோப்பாய் தெற்கு.*
(15525)
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# வாசகர் திருமுகம்

## திடீர் மாற்றம் ஏன்?

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 986 இலக்க பஸ் அச்சுவேலிக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே இராசவீதியினூடாகப் பொதுமக்கள் சேவையில் ஈடுபட்டு வருவது யாவரும் அறிந்ததே. இச் சேவையில் ஒரு பஸ் மாத்திரமே ஈடுபட்டு வருகின்றது. ஆரம்பத்தில் ஐந்து தடவைகளாக இடம்பெற்ற இச்சேவை பின்னர் நான்காக மாற்றப் பட்டது. இந்த பஸ்ஸில் பாடசாலை மாணவர்கள் உட்பட ஏனைய பொதுமக்களும் ஒன்றாகவே பிரயாணம் செய்து வந்தனர். ஆனால், 01.03.2003இலிருந்து பாடசாலை நாள்களில் காலையும் பிற்பகலும் மாணவர்கள் தவிர்ந்த ஏனையோர் பிரயாணம் செய்ய முடியாது என்றும் ஏனைய நேரங்களில் மட்டுமே பொதுமக்கள் பிரயாணம் செய்ய முடியும் என்றும் அறிகின்றோம். இதனால், வேதனையும் ஏமாற்றமும் அடைகின்றோம். இந்த பஸ்ஸில் வயோதிபர்கள், நோயாளர்கள், அங்க வீனர்கள், அரச ஊழியர்கள், தனியார் கல்வி நிலையங்களிலே பயிலுகின்ற மாணவர்கள் எனப் பலரும் பிரயாணம் செய்து பயன டைந்தனர். ஆனால், தற்போது ஏற்பட்டுள்ள இத்திடீர் மாற்றத்தினால் இவர்கள் பெரிதும் அவதியுறுகின்றனர்.

ஏனெனில் இவர்கள் வேறுபாதையினூடாகப் பிரயாணம் செய்வதாயின் மிக நீண்ட தூரம் தமது பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டும். இது சாத்தியமற்றதாகும். எனவே, இதுவரை காலமும் நடைபெற்றது போன்று இந்த பஸ்ஸில் ஏனைய பொதுமக்களையும் ஏற்றவேண்டும். அப்படியில்லையாயின் அவ்விரு நேரங்களிலும் இரு பஸ் சேவைகளை நடத்த வேண்டும். இச்சேவைக்குப் பொறுப்பானவர்கள் இதனைப் பரிசீலனை செய்து பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஆவன செய்ய வேண்டுமெனத் தயவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

பயணிகள் சார்பில்
கே.சசி.

## ஆஸ்பத்திரியை மூடியது சரியா?

பெரும் மருந்துத் தட்டுப்பாடு மற்றும் ஆளணிப் பற்றாக்குறை காரணமாக சங்கானைப் பட்டின உப அலுவலகத்தில் இயங்கி வந்த சித்த ஆயுர்வேத வைத்தியசாலை மூடப்பட்டதாகவும் இனி அதனை மீண்டும் திறக்கும் உத்தேசம் எதுவும் கிடையாது எனவும் சுழிபுரம், வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தின் செயலாளர் தெரிவித்திருந்ததாகக் கூறி செய்தி ஒன்று 01.03.2003ஆம் திகதிய உதயன் பக்கம் 05இல் வெளியாகியிருந்தது.

மேற்படி வைத்தியசாலை ஒன்றை மூடிவிடுவதற்கு அதிகமாகவே அக்கறை காட்டிவிடும், உதவி புரியும் அதிகாரிகள் மற்றும் விடயத் தரப்பினர் கவனிக்க வேண்டியவை நிறையவே உள்ளன. அவை வருமாறு:-

1) இவ்வைத்தியசாலை இப்படியானதோர் இக்கட்டான நிலைக்குச் சென்றுகொண்டிருப்பதை இதுவரை மேலிடத்துக்கு அறிவித்திருந் தார்களா? அப்படியாயின் எத்தனை தடவைகள்?

2) ஆயுர்வேதத் திணைக்களம் (கொழும்பு) மருந்து வகைகளின் பெறுமதியை 50,000 ரூபாவாகக் குறைத்த போதும் (2002இலும்) பின்னர் தற்போது 10,000 ரூபாவாகக் குறைத்த போதும் இதற்கான காரணங்களை அறிவதற்காகவோ அன்றி இதனை நிவர்த்திக்கவோ, எத்தகைய முயற்சிகளையேனும் குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற் கொண்டார்களா?

3) சித்த ஆயுர்வேதத் துறையின் இறுதி வருடக் கற்கைநெறியைப் பூர்த்தி செய்து உள்ளகப் பயிற்சிக்காக காத்திருக்கும் வைத்திய மாணவர்கள் உட்பட வேலையற்ற பட்டதாரிகள் அதிகமாகவே காணப் படுகின்ற இக்காலகட்டத்தில் "ஆளணி வசதி இல்லை" என்பது எந்த வகையில் நியாயமானது?

4) வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு என அபிவிருத்திப் பணிக்கே முன்னுரிமை கொடுத்துவரும் இக்காலகட்டத்தில் பொருத்த மான இடத்தில் சிறப்பான சேவையை ஆற்றிவரும் ஓர் ஆஸ்பத்திரியை மூடிவிடுவது என்பது எந்தவகையிலும் அறிவு பூர்வமான செயலல்ல.

5) இந்நிலையில் விட்ட தவறுகளை நன்குணர்ந்து அனைத்துத் தரப்பினரும் உரியவகையில் மிகவும் அர்ப்பணிப்புடனும் கடமையு ணர்வுடனும் செயற்பட்டு இவ்வைத்தியசாலைக்கு வேண்டிய அனைத்து- தம்மாலியன்ற- உதவிகளையும் செய்து மீளவும் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு பணிவன்புடன் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்வ துடன், இத்தகைய செயற்பாடுகளைச் செவ்வனே செய்யத் தொடர்ந்தும் தவறுவார்களேயாயின் அல்லது வெறும் அறிக்கைகளை விடுத்த வாறே இருப்பார்களேயாயின் "காலம்" கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூறவேண்டிவரும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

-நலன்விரும்பி.

## தபாலகங்களில் மின் கட்டணம்: பொதுமக்களின் சிரமம் நீங்குகிறது

கடந்த 23.02.2003 அன்று 'உதயன்'பத்திரிகை 'வாசகர் திருமுகம்' பகுதியில் திருநெல்வேலி திரு.சு.ஆ.கோபாலமூர்த்தி என்பவர், தபாலகங்களில் மின்கட்டணங்களை ஏற்றுக்கொள்ளாததையிட்டு மிகுந்த வேதனையுடன் எழுதியிருந்தார். உண்மைதான். அவர் கூறுவது போல மின்கட்டணங்களை தபாலகங்களில் செலுத்துவது மக்களுக்கு மிகவும் சுலபமானதே!

இனிவரும் மாதங்களில் மின்கட்டணங்களை தபாலகத்தில் செலுத்து வதற்கான நடைமுறைகள் தபாலக உயர் அதிகாரிகளினால் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இது உண்மை. இதற்கு முன்னோடியாக தற்போது அதாவது சென்ற 10.01.2003ஆம் திகதி தொடக்கம் 'சுன்னாகம்' அஞ்சலகத்தில் மின்கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றன. இதைத் தொடர்ந்து மற்றைய தபாலகங்களிலும் மின் கட்டணங்கள் மிகமிக விரைவில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பது உறுதி. எதிர்வரும் மாதங்களில் தபாலகங்களில் நடைபெறப்போகும் இச்சேவையாவது பொதுமக்களுக்கு நன்மை பயக்கும் என்பது வெள்ளிடைமலை.

கரவெட்டி. சி.பானுராஜா.

# சுயநிர்ணய உரிமைபற்றி விவாதிப்பது நல்ல திருப்பம்

## லண்டன் பல்கலைக்கழக மனித உரிமை ஆர்வலர் மகிழ்ச்சி தெரிவிப்பு

**பண்டத்தரிப்பு தியான இல்ல மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற 'சுயநிர்ணயம்' பற்றிய பட்டறையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு இது.**

"சுயநிர்ணயம் என்பது மீறப்படும் போது அது ஒரு மனித உரிமை மீற லாகவே கருதப்படவேண்டும். இதில் உள்ளக சுயநிர்ணயம், வெளி சுய நிர்ணயம் என்று இருபிரிவுகள் உள என. உள்ளக சுயநிர்ணயம் தொடர் பாக அதிகாரங்களை எவ்வாறு பங்கீடு செய்வது என்பதை சம்பந் தப்பட்ட இருதரப்புகளும்தான் கலந் துரையாடி தீர்மானிக்க வேண்டும். ஆனால், இது பற்றிய சில சிந்தனை களை கடந்த கால அனுபவங்களி லிருந்தும் சர்வதேச நிகழ்வுகளிலிருந தும் இங்கு எடுத்துக் கூறுவதே எமது நோக்கமாகும்.

முரண்பாட்டுக் கற்கைகளுக்கான 'போர்கொவ்' நிறுவனம் (**Berghof Foundation for Conflict Stu dies**) பண்டத்தரிப்பு தியான இல்ல மண்டபத்தில் கடந்த 8ஆம், 9ஆம் திகதிகளில் நடத்திய 'சுயநிர்ணயம்' (**Self - Determination**) தொடர் பான வேலைத்திட்ட பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றிய லண்டன் பல்கலைக்கழகத்தின் பொது நலவாய நாடுகளின் மனித உரிமை கள் பிரிவின் வேலைத்திட்ட அதிகாரி டாக்டர் ஹெலனாவோல் (**Dr.Helenawhall**) மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

நான் எழுதிய "சுய நிர்ணயத் திற்கான உரிமை - ஸ்ரீலங்காவின் தமிழ் தேசியத்தின் கேள்வி" என்ற நூலை பத்து வருடங்களுக்கு முன்னர் பிரிட்டனிலுள்ள தமிழ் தகவல் நிலை யம் வெளியிட்டது. அன்று தொடக் கம் இங்கு வந்து யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களை நேரில் சந்தித்து உரையாடவும், பார்வையிடவும் நான் பெரிதும் விரும்பியிருந்தேன். அந்த சந்தர்ப்பம் இங்கு இன்று கிடைத் திருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின றேன். *சுயநிர்ணயம் தொடர்பாக* நான் எழுதிய நூல் 1995ஆம் ஆண்டில் இலங்கைக்கு கொண்டு வரப்படுவது சுங்கத் திணைக்களத் தினால் தடை செய்யப்பட்டது. பின்னர் இராணுவத்திற்கும் விடுதலைப் புலி களுக்கும் இடையில் இடம்பெற்ற கடும் போரை அடுத்து சுயநிர்ணயம் தொடர்பான அரசியல் தீர்வுபற்றிய பேச்சுக்கான களம் அமைக்கப்பட் டுள்ளது. சமஷ்டி முறையிலான தீர்வுதான் பொருந்தமானது என்ற கருத்து இன்று முன்னெடுத்து செல்லப்பட்டு வருகின்றது. இலங்கை அரசு இந்த நிலைப்பாட்டுக்கு வந்த பின்னர் இன்று சுயநிர்ணயம் என்ற கோட்பாடு பற்றி பகிரங்கமாக கலந்துரையாடுவதற்கும், விவாதிப் பதற்குமான காலம் கனிந்துள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தற்போதைய அமைதி நிலை, சமாதானநிலை வெற்றி யளிக்க வேண்டும் என்பதே இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டிய முக்கிய விடயமாகும். அரசியல் தீர்வானது தமிழ் மக்களின் சுயநிர்ணயக் கோட் பாட்டினதும் உள்ளக சுயநிர்ணயத் தினதும் அடிப்படையில் கட்டி எழுப் பப்படவேண்டும்இவ்வாறான நிலைமை யையே நான் பெரிதும் வரவேற்கின் றேன். *தமிழ் மக்களின் அரசியல்,* சமூக, கலாசார, பொருளாதார விட யங்கள் அரசியல் திட்ட ரீதியாக இந்த உள்ளக சுயநிர்ணயத் திட்டத தில் உறுதி செய்யப்பட்டு இடம்பெற வேண்டும்.

1966ஆம் ஆண்டின் ஐ.நாவின் மனித உரிமைகள் தொடர்பான அறிக் கையில் உள்ளக சுயநிர்ணயத்திற் கான உரிமைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படை யில் 1976ஆம் ஆண்டில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத் தினத் தின் அடிப்படையிலும் 1985ஆம் ஆண்டின் திம்பு பேச்சின் போதும் 1994 - 1995 ஆண்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட சமாதான பேச்சு களிலும் பிரபாகரனின் 2002ஆம் ஆண்டு நவம்பர் 27 மாவீரர் தின உரையிலும் உள்ளக சுயநிணயக் கோட்பாடே தமிழ் மக்களின் அபிலா ஷைகளாக இனங்காணப்பட்டுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். பிரபாகரன் தமது உரையில், தமிழ் மக்களின் சுதந் திரம் உள்ளக சுயநிர்ணய அடிப் படையில் தீர்வு காணப்படவேண்டும் என்ற கருத்தை வெளியிட்டது கவனிக்கத்தக்கது. இந்த அடிப்படை யில் தீர்வு கிட்டுமானால் தமிழ்மக்க ளின் நீண்டகால துன்பங்கள் நீங்கவும் அரசியல் அபிலாஷைகள் நிறைவேறவும், நாட்டில் அமைதி நிலவவும் வழி ஏற்படும் என்று கருதுகின்றேன். தற்போதைய சமா தானப்பேச்சு வெற்றியளிக்க சகல தரப்புகளும் முயற்சிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

'சுயநிர்ணயம் மற்றும் அதிகார பங்கீடு - சில சர்வதேச செயற்பாடு கள்' - என்ற தலையங்கத்தில் ஹொங்கொங் பல்கலைக்கழக சட்டத் துறை பேராசிரியரும், கென்யா நாட்டின் அரசியல் மறுசீரமைப்பு திட்ட ஆலோசகருமான பேராசிரியர் யாய் ஷ் கோய் (**YashGhai**) உரையாற்றுகையில், உலக நாடு களில் கடந்த காலங்களில் இனப் பிரச்சினைக்கு ஏற்படுத்தப்பட்ட தீர்வுகள் பற்றியும் அதில் ஏற்பட்ட சாதக, பாதக நிலைகள் பற்றியும் அறிக்கை சமர்ப்பித்து விவரித்துக் கூறினார்.

அவர் தனது உரையில்-

வெளிநாடுகளில் ஏற்கனவே உருவாக்கப்பட்ட அரசியல் திட்ட யாப்பு பற்றிய நுண் அறிவையும் இங்கு பிரச்சினைக்கு தீர்வு காணும் போது பயன்படுத்த முடியும். ஒரு பகுதியின் கருத்துக்களை மட்டும் கேட்காது மறுபகுதியின் கருத்துக் களையும் கேட்கவேண்டும். இந்தியா வின் அரசமைப்புத் திட்டத்தில் மொழி அடிப்படையில் இன அடையா ளம் காணப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்பு இலங்கைக்கு பொருத்த மானதாக இருக்கமாட்டாது - என்றார்.

யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி க.சிதம்பரநாதன் உரையாற்றுகையில்-

சுயநிர்ணயம் மூலம் எமது மக்களின் உரிமைகள் பாதுகாக்கப் படுவதையே தமிழ் மக்களாகிய நாம் பெரிதும் விரும்புகின்றோம். சிங்கள மக்கள் இந்த நாடு இரண் டாகப் பிரிந்துபோவதை விரும்பா மல் இருப்பதையும் நாங்கள் மதிக் கின்றோம். சிங்கள இராணுவம் ஏகபோக அதிகாரத்தில் இருக்கும் வரை தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். சிங்களவர் களைக் கொண்ட படைத்தரப்பு தமிழ் மக்கள்மீது கடந்த காலங் களில் மேற்கொண்ட- கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரமான - நாகரிக மற்ற - இனரீதியிலான செயற்பாடு களை நாம் இலகுவில் மறந்து விட முடியாது. திருகோணமலை குமார புரம் படுகொலைச் சம்பவத்தையும் 15வயது அப்பாவித் தமிழ் யுவதி ஒருவர் இராணுவத்தால் எவ்வாறு துன்புறுத்தப்பட்டு படுகொலை செய் யப்பட்டார் என்பதையும் இனக்கல வரங்களில் தமிழ்மக்கள் மோச மான பொருள் இழப்புக்கும், காயங்களுக்கும், உயிரிழப்புகளுக் கும் உள்ளானார்கள் என்பதையும் இங்கு விவரித்துக் கூறவேண்டியுள் ளது. ஆகவே, உள்ளக சுயநிர் ணய தீர்வில் சிங்களவர்களுக்கு சிங்கள இராணுவம் இருப்பது போல் தமிழர்களின் பாதுகாப்புக்கென தமிழ் இராணுவம் ஒன்று இருக்க வேண்டும் என்பதை இங்கு வலி யுறுத்திக் கூறவிரும்புகிறோம். நாங்கள் மேற்கத்தைய நாடுகளின் சமாதான முயற்சிகளை வரவேற் கிறோம். எமது தமிழ்த் தலைவர்கள் கடந்த 50 வருடகாலமாக வலியு றுத்தி கேட்டுவரும் உரிமைகள் எமக்குக் கிடைத்தாக வேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கி றோம் - என்றார்.

இலங்கை மனித உரிமைகள் நிறுவன சட்டத்தரணி சிறிலால் லக்திலக்கா உரையாற்றுகையில் -

கடந்த 1984ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய கோரிக்கை எழுப்பப்பட்டு வருகின்றது. 'தமிழ் தேசியம்' இன்று வளர்ச்சி கண்டுள்ளது. சமாதானப்பேச்சை முன்னெடுத்துச் சென்று வெற்றி காணப்பட வேண்டும் என்ற அக் கறை சிங்கள மக்களிடையேயும் இன்று ஏற்பட்டிருப்பது முக்கியமான தொரு விடயமாகும். தமிழ் மக்க ளுக்கு கௌரவமானதொரு தீர்வு கிடைக்க வேண்டும். முஸ்லிம்களின் கோரிக்கைகள், இந்திய அரசின் தலையீடு ஆகிய பிரச்சினைகளும் உள்ளன என்பதையும் கவனத்திற் கெடுக்க வேண்டும். சிக்கல் மிகுந்த இப்பிரச்சினை விரைவில் தீர்க்க அனைத்து தரப்பினரும் இதயசுத்தி யுடன் முன்வரவேண்டியது அவ சியம் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக பட்டப் படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், தமிழீழ விடுதலை இயக்க பிரமுகர் ஈழவேந்தன், யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண் டகை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரிவினர் ஆகி யோர் உட்பட மற்றும் பலர் இதில் கலந்துகொண்டு கருத்துரை வழங்கி னார்கள். இப்பட்டறையில் கலந்து கொண்டவர்கள் மூன்று குழுக்க ளாகப் பிரிந்து விவாதித்து கலந் துரையாடலில் ஈடுபட்டனர். இது பற்றிய செயற்றிட்ட அறிக்கையும் இறுதியில் சமர்ப்பிக்கப்பட்டது.

தொகுப்பு: நா.மா.கந்தசாமி
(சண்டிலிப்பாய் செய்தியாளர்)

# ஐ.நா.உணவு, விவசாய நிறுவன பிரதிநிதிகள் குழுவினர் விஜயம்

யாழ்ப்பாணம்,மார்ச்14

ஐ.நா.உணவு, விவசாய நிறுவ னத்தின் கொழும்புத் தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த குழுவி னர் கடந்த சனிக்கிழமை யாழ்ப்பா ணத்துக்கு விஜயம் மேற்கொண் டனர்.

கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சின் முன்னாள் மேல திக செயலாளர் கேதபாரன் தலை மையிலான இந்தக் குழுவில், பொரு ளாதார நிபுணர் செல்வி கீதா மகேஸ் வரன், கடற்றொழில் வள நிபுணரும் ஆலோசகருமான பீ.டி.வெஸ்லி யோசப் மற்றும் கடற்றொழில் கட்டமைப்பு மற்றும் கரையோர வளத்துறை நிபுணர் பி.சன்னா பெர்னாந்து ஆகியோர் இடம்பெற்றி ருந்தனர்.

இவர்கள் மன்னார், முல்லைத் தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர். சுமார் ஒருவார காலம் யாழ்ப்பாணத்தில் கடற்றொழில் அபிவிருத்தி மற்றும் கடல்வள அபி விருத்திக்கான ஊக்குவிப்பு சம்பந்த மாக ஆய்வினை இவர்கள் மேற் கொள்ளவுள்ளனர்.

இந்த ஆய்வின் மூலம் பெறப் படும் முடிவுகள் அடங்கிய அறிக்கை யில் மீள்குடியமர்வு, கடல்வளம் மற் றும் சேதமான வளங்களின் அபி விருத்தி, மீன்பிடி மூலவள அபிவி ருத்தி, முகாமைத்துவம் ஆகியன இடம்பெறவுள்ளதாகவும் -

இந்த அறிக்கையின் அடிப்படை யில் கடற்றொழில் அபிவிருத்தி, கடல்வளம் தொடர்பான அபிவிருத்தி ஆகியவற்றுக்கு நவீன தொழில் நுட்ப முறைகளை வடக்கு - கிழக் கில் எதிர்காலத்தில் பயன்படுத்துவ தற்கு ஊக்குவிப்பு வழங்கப்படவுள்ள தாகவும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-6)

## கண்ணிவெடி அகற்றும் பணி மருதங்கேணியில் ஆரம்பம்

மருதங்கேணி பிரதேசத்தில் மனித நேய கண்ணி வெடியகற்றும் பிரிவினர் மிதிவெடிகள் மற்றும் வெடி பொருள்களை அகற்றும் பணிகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

முன்னர் இராணுவத்தினரின் மண் அரண்கள், காவலரண்கள் காணப் பட்ட மருதங்கேணி, தாளையடி, கட் டைக்காடு ஆகிய பகுதிகளிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுவருகின்றது.

மனிதநேய கண்ணிவெடியகற் றும் பிரிவைச் சேர்ந்த 100 பேர் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள் ளனர்.

(எ-182),

# திருக்கல்யாண உற்சவம்

யாழ்ப்பாணம்,மார்ச்14

வல்வெட்டித்துறை, வைத்தீஸ்வரன் ஆலய திருக்கல்யாண உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

உற்சவத்தைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ எஸ்.உமாரமணனின் இன்னிசைக் கச்சேரியும் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை, சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். (ஒ-9)

# கண்ணீர் அஞ்சலி

எனது அன்பு நண்பன்

## செல்லத்துரை தர்மரெட்ணம் *(செல்வம்)*

*செல்வம் என்று அன்பாக அழைத்தேன்; சிறுவயதுமுதல்*
*ஒன்றாக வளர்ந்து ஒன்றாகவே கல்வி கற்று கூடித்திரிந்ததும்*
*கொஞ்சிக் குலாவியதும் உன்னுடன் பழகிய நினைவுகள் இன்றும்*
*என் நெஞ்சில் பசுமையாய் இருக்கிறது. இன்று காலன்*
*உன்னைக் கவர்ந்துவிட்டான் யாரிடம் சொல்லி அழுவேன்?*

10. 03. 2003 அன்று இறைபதம் அடைந்த எனது அன்பு நண்பனின் பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருடன் எனது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றேன்.

*70/11, சொலமன் லேன்,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* (15553)

உன் பிரிவால் துயருறும்:
நல்லையா றட்சன்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வையத்துள் அறிமுகம்
05 - 10 - 1927



தெய்வத்துள் சங்கமம்
22 - 02 - 2002

அமரர்

## சண்முகம் கணபதிப்பிள்ளை

அன்பின் சிகரமே! பண்பின் தெய்வமே!
சொல்ல வழி இன்றித் துடிக்கின்றோம் - உம் இழப்பை
ஈராறு மாதங்கள் இன்றோடு சென்றாலும்
இருப்பீர்கள் என்றும் எம் நினைவில்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*யாமாளை,*
*சுழிபுரம்.*

என்றும் நீங்கா நினைவுகளுடன்:
குடும்பத்தினர். (15526)

# நெஞ்சகலா நினைவலையின் மூன்றாம் ஆண்டு

மலர்வு
10 - 06 - 1946



உதிர்வு
14 - 03 - 2000

## அமரர் த.மாசிலாமணி

பாசமிகு அப்பாவே! கலங்கி வாடுகின்றோம்!
கண்ணீரில் தேடுகின்றோம்!
நாம் வாழும் காலம் மட்டும் உம்
வரவைப் பார்த்திருப்போம்!

*மல்வம்,*
*உடுவில்.* (15536)

உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16 - 12 - 1952



மறைவு
14 - 03 - 2002

## திருமதி வள்ளிப்பிள்ளை குணரத்தினம்

எம் அன்புத்தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு நிறைந்த இந்நாளில் அன்னையை
நினைவு கூர்ந்து அவரது ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஞானவைரவர் கோவில் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு.*
நிரந்தர முகவரி:
*பாடசாலை வீதி, இடைக்காடு, அச்சுவேலி.*

என்றும் மறவாத:
கணவர், பிள்ளைகள். (15428)

# தொலைக்கல்வி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம்,மார்ச்14

தொலைக்கல்வி ஆசிரியர் சங்கத்தின் அவசரக் கலந்துரையாடல் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும் -

1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் நியமனம் பெற்றவர்களை நிரந்தரமாக்குவதற்கான நடவடிக்கை குறித்து இதில் ஆராயப்படவுள்ளதாகவும் - மேற்படி சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஒ)

# இந்து சபையை உருவாக்க இன்று கூட்டம்

நவாலி,மார்ச்14

யாழ்.மாவட்டத்தில் இந்துசமய அபிவிருத்திச் சபையொன்றை உருவாக்கி அதற்கான உறுப்பினர்களை தெரிவுசெய்ய இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இச்சபையைத் தெரிவுசெய்வதற்கான கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலுமுள்ள அறநெறிப் பாடசாலைகள், இந்துசமய நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மேலதிக அரச அதிபர் கேட்டுள்ளார்.

(ஒ-100)

## சினிமா தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச்14

'சலனச் சித்திரம்' அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச சினிமா தின நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.2ஆம் குறுக்குத் தெருவில் உள்ள இவ்வமைப்பின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'எஸ்கிறிப்நெற்' நிறுவனத்தின் யாழ்.திட்ட இணைப்பாளர் ஆ.ஞானதாஸ் விசேட விருந்தினராகக் கலந்துகொள்வார்.

படக்காட்சிகள், விமர்சனம், பயிற்சி வகுப்பு, கலந்துரையாடல், கவிதையரங்கம் என்பன இந்நிகழ்வில் இடம்பெறவுள்ளன. (ஒ)

# மரண அறிவித்தல்கள்

## கதிரிப்பிள்ளை சிறீஸ்கந்தராசா

காடிவளை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வாழ்விடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை சிறீஸ்கந்தராசா அவர்கள் (12.03.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கதிரிப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் மகனும் இலங்கைநாயகியின் அன்புக் கணவரும் விஜிதா (கனடா), அனித்தா, தார்மிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிதம்பரப்பிள்ளை(அமரர்) - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் அருந்தவராசா (ஜேர்மனி), ஜெயராணி (கொழும்பு), கலாராணி (ஜேர்மனி), மோகனராசா (ஜேர்மனி), லதாராணி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுப்பிரமணியம் (தபாலதிபர், அளவெட்டி), கிருஷ்ணசாமி, வேலாயுதம் (சுவிஸ்), தெய்வேந்திரன் (சுவிஸ்), சரஸ்வதியம்மா(கனடா), தேவதி, மல்லிகாதேவி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் (17.03.2003) திங்கட்கிழமை சுவிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தாவத்தை, இளவாலை.*
T.P.: 052-2425339 (சுவிஸ்). (15555)

தகவல்: சி.சுப்பிரமணியம் (மைத்துனர்).

## திருமதி கதிரவேலு பத்மாவதி

சுருவிலைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு பத்மாவதி கடந்த புதன்கிழமை (12.03.2003) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - பொன்னம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் கதிரவேலுவின் அன்பு மனைவியும் சகுந்தலாதேவி (கிளி), காந்தன் (சவூதி), சாந்தாதேவி, ஸ்ரீதரன் (சவூதி), கனகேஸ்வரன் (லண்டன்), கருணாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் மகாதேவன், கீதா (இந்தியா), சாந்தகுமார், சகுந்தலா, மஞ்சுளா (லண்டன்), ரவிச்செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் நிரஞ்சன் (லண்டன்), ஜீவரஞ்சன், கமலரஞ்சன், விமலரஞ்சன், கேதீஸ்ரஞ்சன், அஜேசு (இந்தியா), சுதர்மன், துலக்சி, பிரியங்கா, சர்மிகா, சுஜீன், கிருபாலினி, அபிஷான், சாருஜன் (லண்டன்), தர்ஷியா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2003) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*55, கொழும்புத்துறை வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.* (15545)

தகவல்: க.காந்தன *(மகன்).*

## இராமலிங்கம் சிவலிங்கம்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவலிங்கம் (10.03.2003) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் நாயன்மார்கட்டைச் சேர்ந்த காலஞ்சென்ற சிவகங்கையின் அன்புக் கணவரும், சிவபாலன் (லண்டன்), சிவஜெயந்தா (கனடா), சிவகுமார் (லண்டன்), சிவஜெனனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (15546)

*3 ஆம் கட்டை,*
*கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.*

தகவல்: க.குகபாலச்சந்திரன் *(பெறாமகன்).*


# நீங்கள் இன்னும் வாசிக்கவில்லையா?

திருமதி அடேல் பாலசிங்கம் எழுதிய

## சுதந்திர வேட்கை

தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பான ரசமான பல சம்பவங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

உதாரணத்திற்கு இதோ:-

"இந்த அடிப்படையில் பார்த்தால், இந்தியாவிலும் இலங்கையிலும் நான் பெற்ற அனுபவம் அபூர்வமானது எனலாம். இறுதியில் தமிழ்க் கண்களால் உலகைப் பார்க்கத் தொடங்கினேன்; தமிழ்ச் சமுதாயம் போலவே உணரத் தொடங்கினேன். பல பிரச்சினைகளில் தமிழ்ச் சமுதாயம் போலவே சிந்திக்கத் தொடங்கினேன். நாளாந்த அடிப்படையில்-அவர்கள் முகம் கொடுக்கும் ஒடுக்கு முறையின் தன்மை பற்றி தமிழ் மக்களுடைய உணர்வுகளையும் சிந்தனைகளையும் என்னால் பகிர்ந்து கொள்ள முடிந்தது. இதனால் மக்களின் எதிர்வினைகள் இயல்பானவை என்பதையும் நியாயமானவை என்பதையும் உணர்வுபூர்வமாக முழுமையாக அறிந்தேன். இந்தப் பூரண ஈட்டத்தின் பின், சில சாதாரண சில்லறை விடயங்களையும் நான் கற்கவேண்டியிருந்தது. கடைத்தெருவில் பேரம் பேசுவது அவற்றில் ஒன்று. சந்தையில் நான் ஏமாற்றப்பட்ட சந்தர்ப்பம் மிகக் குறைவே. எனக்கும் வியாபாரத் தந்திரங்கள் புரியும் என்பதை உணர்த்த வேண்டிய சந்தர்ப்பங்களும் வந்தன. இதனால் என்னை எளிதில் ஏமாற்றமுடியாது என்பதையும் புரியவைத்தேன்."

*இதே போல் இன்னும் பல சம்பவங்கள்*
*இனியும் தாமதிக்காதீர்கள்*

உதயன் பத்திரிகை முகவர்களிடமும்,
பிரபல புத்தக நிலையங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

பக்கங்கள்: 479 விலை 500/-

# மத்தியகிழக்கு யுத்த அச்சத்தினால் தேயிலை ஏற்றுமதியாளர் பாதிப்பு

## நிவாரணம் அவசியம் என்கிறார் ஹெட்டி ஆராச்சி எண்டர்பிரைஸஸ் அதிபர்



ரீ.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் தொழில் அதிபர் காமினி ஹெட்டி ஆராச்சியை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும், 113 கம்பனிகளைக்கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள். இடமிருந்து இரண்டாவதாக அமர்ந்திருப்பவர் மொழிபெயர்ப்பாளர் குணரத்னம்.

**வர்த்தக ஸ்பெஷல்**

ரீ.என்.எல்.தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 11ஆம் திகதி தோன்றி, தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் தொழில் அதிபர் காமினி ஹெட்டி ஆராச்சி.

தென் இலங்கை நகரமான காலியைப் பிறப்பிடமாகக் கொண்ட காமினி ஹெட்டி ஆராச்சி, மலையகத்தில் வியாபாரம் செய்கிறார். அதிநவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி ஹட்டனில் தேயிலைத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்.

அங்கு தன்னிடம் தொழில் செய்யும் தமிழ் தொழிலாளர்கள் அனைவரும் தன்னுடன் சகோதரத்துவத்துடன் பணியாற்றுகிறார்கள் என்று கூறுகிறார் ஹெட்டி ஆராச்சி எண்டர்பிரைஸஸ் உரிமையாளர் காமினி ஹெட்டி ஆராச்சி.

ரீ.என்.எல். தொலைக் காட்சியில் தொழில் அதிபர் காமினி ஹெட்டி ஆராச்சியை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்ரமவும் 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலா வலையும் செவ்வி கண்டனர்.

செவ்வியை இங்கே படித்துப்பாருங்கள்.

*கேள்வி:-* ஆரம்பத்தில் மொத்த மற்றும் சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டு தற்போது உங்களது சொந்த தேயிலைத் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து நடத்துகிறீர்கள். இது வரையும் நீங்கள் கடந்துவந்த பாதை எவ்வாறானது. அது பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:-* நான் தேயிலைத் தொழிலை ஆரம்பித்து மூன்று மாதங்கள்தான் ஆகின்றன. இந்தத் துறையில் எனக்குப் பெருமளவிலான அனுபவம் எதுவும் இல்லை. எனது தந்தை காலியிலிருந்து மலைநாட்டிற்குச் சென்று வியாபாரத்தை ஆரம்பித்தார். அவரிடம் அதற்கான அனைத்து திறமைகளும் உள்ளன. அப்பிரதேச மக்களுடன் சேர்ந்து சரளமாக தமிழ் பேசுவார். தந்தையின் ஆசீர்வாதம் எனக்கு எப்போதும் இருக்கிறது.

ஹட்டன் பொஸ்கோ கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்று, பின்னர் கொழும்பு ஆனந்தா கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன். பல்கலைக் கழகத்திற்குப் பின்னர் தெரிவானபோது எனது தந்தை இறந்துவிட்டார். எனவே, வியாபாரத்தைப் பொறுப்பேற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

1991இல் ஹெட்டி ஆராச்சி எண்டர்பிரைஸஸ் மூலம் சொந்த வியாபாரத்தை ஆரம்பித்தேன். அதன்பின்னர் தேயிலைத் தோட்டம் ஒன்றை வாங்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. 1998இல் செலான் வங்கியின் உதவியுடன் தேயிலைத் தோட்டத்தைக் கொள்வனவு செய்தேன். பின்பு தொழிற்சாலையை ஆரம்பிக்கும் ஆசை வந்தது. அதற்குத் தேவையான அறிவுரைகளை சில நண்பர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டேன். மூன்று மாதங்களுக்கு முன்னர் தேயிலைத் தொழிற்சாலையை ஆரம்பித்தேன். அதில் வேலை செய்யும் அனைவரும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள்.

*கேள்வி:-* முன் அனுபவம் இல்லாத ஒரு தொழிலை ஆரம்பித்துள்ளீர்கள். இது ஒரு சவால், இதை ஏற்கும்போது பயமாக இருக்கவில்லையா?

*பதில்:-* ஆம். அது ஒரு சவால்தான். ஆனால், அதற்குரிய துணிவும் தைரியமும் இருந்தன.

*கேள்வி:-* உங்கள் தந்தை அல்விஸ் அப்புஹாமி ஒரு நல்ல வர்த்தகர். அவர் தனது வியாபார கொள்கைகள் பற்றி உங்களுக்கு எவ்வாறான அறிவுரைகளை வழங்கியுள்ளார்?

*பதில்:-* ஆம். பல அறிவுரைகளை வழங்கினார். அவர் சிறிய அளவில் வியாபாரத்தைச் செய்த போதிலும் அதனை நேர்மையாகச் செய்தார். எவரிடமும் கடன் வாங்க அவர் விரும்பவில்லை. முகாமைத்துவம் பற்றி சரியான வழிகாட்டல்களை வழங்கினார். அந்த ஆசீர்வாதமும் வழிகாட்டலும்தான் எனது முன்னேற்றத்திற்குக் காரணங்கள். அதிகாலையில் எழும்புவது முதல் அவர்தான் நல்ல பழக்கவழக்கங்களை ஏற்படுத்திக் கொண்டார்.

*கேள்வி:-* காலையில் எத்தனை மணிக்கு தூக்கத்திலிருந்து எழுவீர்கள்?

*பதில்:-* ஐந்து மணிக்கு எழுந்துவிடுவேன்.

*கேள்வி:-* நீங்கள் தென்னிலங்கையைச் சேர்ந்தவர். மலையகத்தில் வியாபாரம் செய்யும்போது ஏதேனும் பிரச்சினைகள் எழுந்ததில்லையா?

*பதில்:-* இல்லை. அப்படி எதுவும் இருந்ததில்லை. என்னிடம் வேலை செய்யும் அனைவரும் தமிழர்கள். ஆனால், எந்தவொரு பிரச்சினையும் ஏற்பட்டதில்லை.

*கேள்வி:-* நீங்கள் ஒரு சிங்களவர் என்பதில் சிக்கல் இல்லையா?

*பதில்:-* இல்லை. தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் அதிலிருந்து வேறுபட்ட தொழில்களைச் செய்ய விரும்புகிறார்கள். அதற்கான வாய்ப்பை நான் ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். அவர்கள் சந்தோஷமாக வேலை செய்கின்றனர்.

*கேள்வி:-* தேயிலை கைத்தொழிலில் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?

*பதில்:-* மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த அச்சம் காரணமாக அப்பகுதியில் தேயிலைச் சந்தையில் தளர்வு ஏற்பட்டுள்ளது. விலையும் குறைந்துள்ளது. எனவே, உற்பத்திச் செலவைவிடக் குறைந்த விலைக்கு தேயிலையை விற்பனை செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

*கேள்வி:-* உங்களது வியாபாரத் துறைக்கு அரசாங்கத்திடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

*பதில்:-* நாம் பெருமளவு பணத்தை முதலீடு செய்து இவ்வாறான வியாபாரங்களை ஆரம்பிக்கிறோம். அவற்றிக்கு வங்கிக் கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ளோம். பெருமளவு வட்டி செலுத்த வேண்டும்.

சிறிது காலத்திற்கு முன் இத்துறையில் முதலீடு செய்ததால் இந்த விலைத் தளர்வு என்னைப் பெரிதும் பாதித்துவிட்டது. அரசினால் ஏதாவது நடவடிக்கை இது விடயத்தில் எடுக்க முடியுமாயின் நல்லது.

நாம் வெளிநாடுகளில் தேயிலை வாங்கினால் ஒரு கிலோவின் விலை 10 டொலர்களையும் விட அதிகமாக இருக்கும். ஆனால், அவ்வாறான ஒரு விலைக்கு எங்களால் எமது தேயிலையை விற்பனை செய்யமுடியாதுள்ளது. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*கேள்வி:-* தேயிலை உற்பத்தியாளர்கள் சங்கத்தினால் நேரடியாகத் தேயிலையை விற்கமுடியாதா?

*பதில்:-* முகவர் நிலையங்களினூடாகவே நாம் எமது தேயிலையை விற்பனை செய்யவேண்டும்.

*கேள்வி:-* நீங்களாக தேயிலையைப் பொதி செய்து விற்பனை செய்ய முடியாதா?

*பதில்:-* அப்படி ஒரு நோக்கம் இருக்கிறது. அதன் மூலம் சாதாரண மக்களுக்கு குறைந்த விலையில் தேயிலையை விற்பனை செய்வதே எமது நோக்கம்.

*கேள்வி:-* மத்திய கிழக்கின் பதற்ற நிலை காரணமாக தேயிலை ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினீர்கள். இவ்வாறான ஒரு நிலையைச் சமாளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்?

*பதில்:-* தாழ்ந்த பிரதேச முறையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைதான் மத்திய கிழக்கிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மலைநாட்டு முறையில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாம் தாழ்ந்த பிரதேச தேயிலையில் தங்கியிருப்பதே எமது பிரச்சினைக்கான காரணமாகும்.

*கேள்வி:-* அதற்கான மாற்று நடவடிக்கை ஏதாவது எடுத்திருக்கிறீர்களா?

*பதில்:-* அதைச் செயற்படுத்துவதற்கு எமது இயந்திரங்கள் எல்லாம் மாற்ற வேண்டியிருக்கும்.

- இவ்வாறு காமினி ஹெட்டி ஆராச்சி தெரிவித்தார்.

# தொழிற்கல்வி வாய்ப்புக்கள் தமிழ் மாணவருக்கும் கிடைக்கும்!

## கலாநிதி குமரகுருபரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்14

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெறும் கணக்கியல் கற்கை நெறிக்கு லண்டன் நிறுவக அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தமையானது, இதுவரை காலமும் தென்பகுதி மாணவர்கள் பெற்றுவந்த தொழில் கல்வி வாய்ப்புகளை தமிழ் மாணவர்களுக்கும் வழங்கும் முயற்சியின் ஆரம்ப கட்டமாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவகத்தின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி என்.குமரகுருபரன்.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் 'உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா' கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவகத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டமை குறித்து விளக்கமளிப்பது தொடர்பான செய்தியாளர் மாநாடு நேற்றுமுன்தினம் யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது.

தொழில்நுட்பக் கல்வித் திணைக்களத்தின் வடக்கு - கிழக்கு பிராந்திய பிரதிப் பணிப்பாளரும், யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபருமான ந.யோகராஜன் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கலாநிதி என்.குமரகுருபரன் மேலும் தெரிவித்ததாவது:-

என்.சி.ஏ.ரி. கற்கைநெறி முடித்தவர்கள், லண்டன் நிதியியல் கணக்காளர் நிறுவகப் பரீட்சைக் குழுமத்தின் நிதியியல் தொழில்நுட்பவியலாளராகவும் - ஐ.ஏ.பியின் கூட்டிணைக்கப்பட்ட கணக்குப் பதிவாளராகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர் - என்றார்.

தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் கூறுகையில், உள்நாட்டில் தொழில் புரிவதற்கு போதிய வேலைவாய்ப்புகள் இல்லாத நிலை காணப்படுகிறது. இந்நிலையில் வெளிநாடுகளிலும் தொழில் வாய்ப்புகளை பெறும் வகையில் சர்வதேச தரத்திலான சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளும் அரிய சந்தர்ப்பம் இதன் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார்.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்.கஜேந்திரன் அங்கு கூறுகையில், கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரியில் பல வசதியீனங்கள் நிலவுகின்றன. அவற்றையும் நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் தொழில்நுட்பக் கல்லூரியின் வணிகத்துறைத் தலைவர் எஸ்.ஜெயராசாவும் கலந்துகொண்டார். (எ-9)

## வார இறுதியில் ரயில் சேவைகளில் பாதிப்பு

கொழும்பு,மார்ச்14

நாளையும், நாளைமறுதினமும் 126 ரயில் சேவைகள் ரத்துச் செய்யப்படவிருக்கின்றன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சைகள் திணைக்களத்தினால ரயில் சாரதிகளுக்கு அவ்விரு தினங்களிலும் நடத்தப்படவிருக்கும் பரீட்சைகுப் பெருமளவு ரயில் சாரதிகள் தோற்றுவதனாலேயே இச்சேவைகள் ரத்துச செய்யப்படவுள்ளன.

வழமையாக நாள் ஒன்றுக்கு 325 ரயில் சேவைகள் நடைபெறுகின்றன. 15ஆம் திகதி 71 சேவைகளும் 16ஆம் திகதி 55 சேவைகளும் ரத்துச் செய்யப்படவிருக்கின்றன என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துளளது.(எ)

### வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில்

# பாதிப்படைந்த கூ.சங்கங்களை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை புனர்நிர்மாணம் செய்வதற்காக ஐந்து கோடி ரூபாவினை ஒதுக்க அமைச்சரவை அங்கீகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதில் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் பங்கு வழங்குவதால் அவை புனரமைக்கப்படவேண்டியது அவசியம் என்பதாலேயே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனினும், திறைசேரியில் நிதிப் பற்றாக்குறை பெரிதும் நிலவுவதால், கூட்டுறவு அபிவிருத்தி நிதியிலிருந்தே மேற்படி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்று நிதி அமைச்சர் கே.என். சொக்ஸி கூறியுள்ளதாகவும் தெரியவருகிறது. (ஒ)



யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றம், பங்குச்சந்தை வாய்ப்புகள் குறித்த செயலமர்வுகளை அண்மையில் யாழ்.வர்த்தக கைத்தொழில் மன்ற அலுவலகத்தில் நடத்தியது.

இந்நிகழ்வில் கொழும்பு பங்குச் சந்தையின் சந்தைப்படுத்தும் முகாமையாளர் ரஜீவ பண்டாரநாயக்க உரையாற்றுவதையும் அருகில் யூரோவில் நிறுவன நிதி முகாமையாளர் எஸ்.நிரஞ்சன், ஐக்கிய வர்த்தக சம்மேளனத்தின் சிரேஷ்ட உறுப்பினர் திஸஜயவீர ஆகியோர் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம். (ஓ-130)

## சமுர்த்தி வங்கி திறப்புவிழா

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உடுப்பிட்டி சமுர்த்தி வங்கித் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11மணிக்கு பிரதேச செயலர் க.கனகரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் யாழ்.அரசஅதிபர் செ.பத்மநாதன், வடக்கு - கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் க.குணராசா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வர். (ஒ-173)

## மண்டலாபிஷேகம்

வடமராட்சி,மார்ச்14

பருத்தித்துறை, மாதனை ஸ்ரீகாளி அம்மன் கோவில் மண்டலாபிஷேக பூர்த்தி தின நவேந்திர சகஸ்ரசங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச்சங்காபிஷேகத்தை சிவாகம கிரியாநிதி பிரம்மஸ்ரீ சி.சுரேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்திவைப்பார். (ஒ-173)

# கென்யாவின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் 5-2 விகிதத்தில் நியூஸிலாந்திடம் தோல்வியுற்றமையால் இந்தியா வீறுகொண்டெழுந்து விளையாடும் என நம்புகின்றேன்.

இந்திய அணி அதை நிரூபிக்கும் ஆவலில் இருக்கும். இப்போட்டியை நாம் உன்னிப்பாக அவதானிப்போம். ஆனால், இதில் நாம் செய்வதற்கு எதுவுமில்லை. இது எமது கைகளுக்கு அப்பாற்பட்டது." - இவ்வாறு வட்மோர் மேலும் கூறினார்.

நியூஸிலாந்து அணி பயிற்றுநர் டெனில் அபே ஹார்ட் கருத்துத் தெரிவிக்கையில்,

"கென்யா சிறப்பாக விளையாடுகிறது. அதேவேளை, அவர்களுக்கு ஓரளவு அதிர்ஷ்டமும் கைகொடுத்துள்ளது" - என்றார். (ம)

# அரையிறுதி...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்பான ஒருநாள் போட்டியொன்றை நடத்துவதற்கேற்ப அரையிறுதி ஆட்டம் நடைபெறும் ஆடுகளம் இருப்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும்.

இவரது பணிப்புரையை அடுத்து ஆடுகளத்தை சோதனையிடும் பணி நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இது ஏற்கனவே ஒரு தடவை பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான லீக் ஆட்டமும் இம் மைதானத்திலேயே நடைபெற்றது. அதிலும் குறைந்த ஓட்டங்களே பெறப்பட்டன. இருந்த போது 2விக்கெட்டுக்களால் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது. அதன்பின் இந்த ஆடுகளம் பற்றி ஆஸ்திரேலிய அணித் தலைவர் ரிக்கி பொன்டிங் குறை கூறியிருந்தார்.

நியூஸிலாந்துடனான ஆட்டம் முடிந்தபின் அவர் கருத்துத் தெரிவிக்கையில் "தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இன்னும் சிறப்பானதாக இல்லை" - என்றார்.

இந்த மைதானத்தில் எதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி பங்குபற்றும். அதன் எதிரணி எது என்று இதுவரை முடிவாகவில்லை.

இது எவ்வாறு இருப்பினும், உலகக் கிண்ண அரையிறுதி போட்டி எக்காரணம் கொண்டும் வேறு மைதானத்திற்கு மாற்றப்படமாட்டாது என உலகக் கிண்ண ஏற்பாட்டுக் குழுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ம-5)

## கென்யா...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட கென்யா, நேற்று முன்தினம் ஸிம்பாப்வே அணியை வென்றதன் மூலம் மேலும் நான்கு புள்ளிகளைப் பெற்று அரையிறுதியில் மோதுவதற்கு வாய்ப்பைப் பெற்றுள்ளது.

3 ஆவது தடவையாக உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடும் கென்யா இம்முறை 'டெஸ்ட்' அந்தஸ்துப் பெற்ற 3 அணிகளை (இலங்கை, பங்களாதேஷ், ஸிம்பாப்வே) தோற்கடித்துள்ளது.

கென்யா அரையிறுதிக்கு தெரிவு செய்யப்பட்டதை அடுத்து இலங்கை அணி தர்மசங்கடத்துள் சிக்கிக்கொண்டுள்ளது.

இலங்கை தற்போது 7.5 புள்ளிகளுடனும், நியூசிலாந்து 8 புள்ளிகளுடனும் உள்ளன. அரையிறுதிக்குச் செல்வதற்கு இவ்விரு அணிகளுக்குமிடையே கடும் போட்டி நிலவுகின்றது.

இன்று செஞ்சூரியன் மைதானத்தில் நடைபெறவுள்ள இந்திய - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் நியூஸிலாந்து அணி வெற்றிபெறுமாக இருந்தால் இலங்கை அரையிறுதிக்குச் செல்லும் வாய்ப்பு கை நழுவிப் போகும். மாறாக இந்தியா வெற்றிபெற்றால் இலங்கை அணி நாளை ஸிம்பாப்வேயுடன் நடைபெறும் ஆட்டத்தில் வெற்றிபெற்று அரையிறுதிக்குச் செல்ல ஒரு வாய்ப்பு உண்டு.

அந்த ஆட்டத்திலும் இலங்கை, ஸிம்பாப்வேயிடம் தோல்விகண்டால் 8 புள்ளிகளுடன் நான்காம் இடத்தில் இருக்கும் நியூஸிலாந்து இலகுவாக அரையிறுதிக்குள் நுழையும். (ம-5)

## இலங்கையின்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்திரேலியாவை ஆரம்பத்தில் கலங்கடித்த அபாரமான வேகப் பந்து வீச்சாளர் ஷேன் பொண்ட்டின் முக்கிய குறியாக இருக்கப்போவது டெண்டுல்கர்தான். அவரை விரைவில் 'பெவிலியன்' திருப்பிவிட்டால் இந்தியா மிகப் பெரிய ஓட்ட வீதத்தைப் பெறாமல் கட்டுப்படுத்திவிடலாம் என்று நியூஸிலாந்து கருதுகின்றது.

ஆனால், அதனை அச்சுறுத்தக் கூடிய மற்றொரு இளம் புயல் அணியில் மையங்கொண்டுள்ளது என்பதும் கவனத்துக்குரியது. ஷேவாக்கை தாம பெரியளவில் கவனத்தில் எடுக்கவில்லை என்பதைப் போன்று நியூஸி. காட்டிக் கொண்டாலும் அவரால் தலையிடி என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும்.

'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவுடன் நியூஸிலாந்து தோற்றது. எனினும் அதனை 208 ஓட்டங்களுக்கு மடக்கியது அதன் பந்து வீச்சுப் பலத்தைக் காட்டுகின்றது. ஒரு கட்டத்தில் 84 ஓட்டங்களுக்கு 7 விக்கெட் இழப்பு என்ற நிலையில் ஆஸியைப் பரிதவிக்க விடவும் அதனால் முடிந்திருக்கின்றது. ஆனால், துடுப்பாட்டத்தில் பிளமிங் தவிர மற்றையவர்கள் எதிர்பார்ப்பை நிறைவுசெய்யவில்லை.

இந்தியாவும் இலங்கையுடனான 'சுப்பர் சிக்ஸ்' ஆட்டத்தில் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சு என்று அனைத்துத் துறையிலும் மிகச் சிறப்பாகச் செய்திருந்தது. தொடர் வெற்றிகளையும் அது சந்தித்து வருகின்றது.

ஷேவாக், டெண்டுல்கர் என்று துடுபாட்டத்துக்கு தலைமைதாங்கும் இருவர். ஸ்ரீநாத், சஹீர்கான் என்று பந்து வீச்சுக்கு தலைமைதாங்கும் இருவர். கைவ், யுவராஜ் என்று களத்தடுப்புக்கு தலைமைதாங்கும் இருவர். இவர்களுடன் கங்குலி என்று இப்போது இந்திய அணி பற்றி வர்ணிக்கப்படுகின்றது. எதிர்பார்த்தற்கு மாறாக இப்போது உள்ள அணிகளில் ஆஸ்திரேலியாவுக்கு சவாலாகத் திகழக் கூடிய அணியும் இந்தியாதான் என்று சொல்லப்படுகின்றது.

இந்நிலையில் நியூஸி. - இந்திய ஆட்டம் நடக்கிறது. இந்த ஆட்டத்தில் இந்தியா வென்றால் ஸிம்பாப்வேயுடனான ஆட்டத்தில் நம்பிக்கையுடன் இலங்கை விளையாடமுடியும். அந்த நம்பிக்கையை வழங்குமா இந்தியா?

-PTP

## வவுனியாவில் தொண்டர் ஆசிரியர் இன்று பேரணி

யாழ்ப்பாணம்,மார்ச்14

வவுனியா மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று வவுனியாவில் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

வவுனியா வடக்கு கல்விப் பணிமனை அமைந்துள்ள காமினி மகாவித்தியாலயத்தில் இருந்து இன்று முற்பகல் 11மணிக்கு ஆரம்பமாகவுள்ள பேரணி வவுனியா அரச அதிபர் அலுவலகத்தில் அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பதுடன் நிறைவடையும்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்பதனை வலியுறுத்தியே இந்தப் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பேரணியின் ஏற்பாட்டாளர்களான வடமாகாண தொண்டர் ஆசிரியர் சங்கத்தலைவர் ஜெ.செந்தில்நாதன் தெரிவித்தார். (எ-6)


**BIT Bachelor of Information Technology**
**University of Colombo School of Computing**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் மேற்படி தகவல் தொழில்நுட்பமானி பட்டக்கல்விக்கான கல்வியாண்டு 2003/2004 இற்குரிய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்ப முடிவுத்திகதி – 20. 04. 2003.

இன்று முதல் IIS தலைமையகத்தில் பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

BIT பட்டப்படிப்புக்கு வடக்கு, கிழக்கிலேயே அதிகளவு மாணவர்கள் கல்வி கற்பதும், பரீட்சைகளில் சித்தியடைவதும் IIS நிறுவனத்திலேயே என்பது யாவரும் அறிந்ததே.

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

INSTITUTE OF INFORMATICS STUDIES
No: 100, Clock Tower Road, Jaffna.
Tel : 21 222 2831



**NOTICE**

**FACULTY OF SCIENCE, UNIVERSITY OF JAFFNA**
**EXAMINATION IN ENGLISH AS A SECOND LANGUAGE**
**(Written Test)**

A Written Test will be conducted on *01 April 2003 from 2 p.m. to 5 p.m. in the Chemistry Lecture Hall.*

All the Students who have failed in the Written Tests conducted earlier could appear for this Examination. They are kindly requested to hand over their Examination entry forms together with the receipt of the payment of Rs.50/= on or before 22.03.2003.

Examination entry forms could be obtained from *the Office of the Dean, Faculty of Science.*

(C/26951) **Dean / Science.**



**மூக்குக் கண்ணாடி விநியோகம்**

12.03.2003 புதன்கிழமை கண்ணாடிகளை பெற்றுக்கொள்ளத் தவறியவர்கள் தயவுசெய்து இன்று (14.03.2003) வெள்ளிக்கிழமை யா/இந்து மகளிர் கல்லூரியில் காலை 9 மணி முதல் 11.30 மணிவரைக்குள் வந்து பெற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**ஒப்டிலைன் ஒப்டிகல்ஸ்**
**(மூக்கு கண்ணாடி விற்பனை நிலையம்)**
54, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை,
கொழும்பு - 02. (15568)


## ஈராண்டு நினைவலைகள்

தோற்றம் 02 - 03 - 1923



மறைவு 06 - 03 - 2001

அமரர்
**கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை**

திதி: 14.03.2003

*என்றும் உங்கள் நினைவில் மாறாது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்*

*இல.99, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.* (15569) - குடும்பத்தினர்.

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவு தினமும்

மண்ணில் 29 - 05 - 1929



விண்ணில் 13 - 02 - 2003

**அமரர் வேலாயுதர் சின்னத்தம்பி**

*(மந்துவில், கொடிகாமம்)*

தற்காலிக முகவரி - கண்டாவளை

**மாசி மாதம் 13 ஆம் நாள் சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தையாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (15.03.2003) சனிக்கிழமை கண்டாவளையில் நடைபெறும். அன்று நடைபெறும் மதியபோசனத்திலும், பிரார்த்தனை நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு வந்து சகல வழிகளிலும் உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் வழங்கியவர்களுக்கும், அனுதாபச் செய்தி, மலர்வளையங்கள் அனுப்பிய சகலருக்கும் நாம் சிரம்தாழ்த்தி நன்றி நவில்கின்றோம்.

கண்டாவளை,
பரந்தன். (15566) - குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### சின்னத்தம்பி கதிரேசன்

**அவர்கள் காலமானதையிட்டு அவருக்கு கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

தகவல்;
வரப்பிரகாசம் விக்டர் பேபி
(வேலணை/பளை - ப.தெ.வ.அ.கூ.சங்கம்),
வரப்பிரகாசம் அன்ரனி (யாழ்.பல்கலைக்கழகம்),
(15570) வரப்பிரகாசம் ஞானப்பிரகாசம்.

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை பாலச்சந்திரன்

சின்னத்துரை பாலச்சந்திரன் அவர்கள் 12.03.2003 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் கல்கி இம்பெக்ஸ் லிமிட்டெட், பெஸ்கோட்ஸ் லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களின் அதிபரும், யாழ்ப்பாணம் - கொழும்பு சின்னத்துரை அன் பிறதர், கல்கி நிறுவனங்களின் ஸ்தாபகரும், சி.சின்னத்துரை சோதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், புன்னாலைக்கட்டுவன் பிரபல தொழிலதிபர் ச.இராஜரட்ணம் - பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், வாசுகியின் அன்புக் கணவரும், Dr.சிவநந்தன் (அமெரிக்கா), ஷர்மிளா, கிருபரன் (சிங்கப்பூர்), சிந்துஜா, தர்மேந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் 0வித்யா (அமெரிக்கா), கிருபரன் (சிங்கப்பூர்), ரஜீவ் தர்மேந்திரா (**Director, Jaykay Marketing Ltd.**) ஆகியோரின் மாமனாரும், புவனச்சந்திரன், சிவமலர், வசந்தமலர், இந்துமலர், ஞானச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும் விமலாதேவி புவனச்சந்திரன், சண்முகரட்ணம் (பபுவா நியூகினி), கணேந்திரன் (ஆஸ்திரேலியா), ஸ்ரீஸ்கந்தராஜா (லண்டன்), ஜெயந்தி ஞானச்சந்திரன், வரதராஜன் (லண்டன்), வனஜா ராமலிங்கம் (லண்டன்), வத்சலா கருணாகரன் (சிங்கப்பூர்), வசந்தி பெரியதம்பி (அமெரிக்கா), வளர்மதி செல்லப்பா (லண்டன்), ராஜி கமலராசா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும் பூஜிதா, துவாரகேஷின் ஆகியோரின் பாட்டனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15B, டொன் கரோலிஸ் வீதி (**Off** ஜாவத்தை வீதி), கொழும்பு 05 இல்லத்தில் 16ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் 9.30 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி.புவனச்சந்திரன்
(சி-26950) *15B, Don Carolis Road, Colombo - 05.*

# வவுனியாவில் பூரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரும் மும்முரமாக முயன்றனர் பல நடவடிக்கைகளை எடுத்தனர்.

நேற்றைய தினம் கடைகளைத் திறந்து வைக்கும்படி நேற்று முன்தினம் பிற்பகல் முதல் ஒலிபெருக்கி பூட்டிய வாகனம் மூலம் நகரத்தின் மூலை முடுக்கெல்லாம் சென்று அறிவிப்பு விடுத்தனர். இராணுவத்தினரும், பொலீஸாரும் ஒவ்வொரு கடையாக ஏறி, இறங்கி வற்புறுத்தினர்.

நேற்றுக்காலையிலும் ஒலிபெருக்கி வாகனங்கள் மூலம் அறிவிப்புத் தொடர்ந்தது.

"வர்த்தகர்களே! உங்களுக்குப் பாதுகாப்பு இராணுவத்தினரும், பொலீஸாரும் தருவார்கள், பிரச்சினைகள் எதுவும் வராது கடைகள் எல்லாவற்றையும் திறவுங்கள்!" - என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால், கடைகள், வங்கிகள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் எவையும் திறக்கப்படவில்லை. செயலகம் உட்பட காரியாலயங்கள் கூட இயங்கவில்லை. வாகனப் போக்குவரத்துகள் இடம்பெறவில்லை. வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. வைத்தியசாலைக்கும் குறைந்த எண்ணிக்கையான நோயாளரே வந்திருந்தனர்.

நகரில் பொலீஸார் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர். எனினும் பெரிய அளவில் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை.

வவுனியா - மன்னார் வீதியில் உள்ள சிங்களப் பாடசாலையான காமினி மகா வித்தியாலயத்தைத் தவிர நகரில் எந்தப் பாடசாலையும் நடைபெறவில்லை.

அதேபோன்று வவுனியா பிரதேச செயலர் (சிங்களப்பிரிவு) அலுவலகம் மட்டும் காலையில் குறைந்த எண்ணிக்கையான ஊழியர்களுடன் இயங்கியது.

வெளிமாவட்டங்களில் இருந்து வேறு இடங்களுக்குச் செல்வதற்காக நேற்றுக்காலை வவுனியா வந்து சேர்ந்த பயணிகள் இந்தக் ஹர்த்தாலால் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கினர்.

எனினும், வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையிலும், வவுனியாவிலிருந்து கொழும்புக்கும் நேற்றுக்காலையில் ஒருசில பஸ் சேவைகள் நடைபெற்றன.

மன்னார் நகரிலும் நேற்றுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. களுத்துறை தமிழ்க் கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதமும் மேற்கொள்ளப்பட்டது.

(ஜ-12)

## காவலாளி மிரட்டல்!

நெடுந்தீவு,மார்ச்14

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 3ஆம் இலக்கக் கிளையின் காவலாளியான குடும்பஸ்தர் நேற்றிரவு அங்கிருந்து விரட்டப்பட்டிருக்கிறார்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலர் அவரை மிரட்டி அங்கிருந்து விரட்டினர் என்றும் நெடுந்தீவிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

(ஐ)

## ஒத்திவைப்பு

யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களுக்குமிடையில் நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவிருந்த தடகள விளையாட்டுப்போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகின் இணைப்பாளர் கே.கணேசநாதன் அறிவித்துள்ளார்.

இப்போட்டிகள் எதிர்வரும் 22 ஆம், 23ஆம் திகதிகளில் நடைபெறும என்றும் அவர் அறிவித்துள்ளார்.

(எ-5)

## ராணுவ அச்சுறுத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் இரவு இராணுவ வாகனம் ஒன்றில் வந்த படையினர் அலுவலகம் மீது ஒளியினைப் பாய்ச்சி அங்கிருந்த போராளிகளை அச்சுறுத்தியிருக்கின்றனர் எனவும் - சர்வதேசக் கடற்பரப்பில் வீரச்சாவடைந்த வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் வடமராட்சியில கறுப்புக்கொடிகளைக் கட்டி, சோககீதம் இசைக்கவிட பொதுமக்கள் ஏற்பாடு செய்தபோது படையினர் அதனைத் தடுத்து நிறுத்தினர் என்றும் - முகமாலை சோதனைச் சாவடியில சோதனை நடவடிக்கையின்போது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளைச் சீண்டும் முயற்சிகள் கடந்த சில தினங்களாக இடம்பெறுவதாகவும்- புலிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்றனர்.

இந்தச் சம்பவங்கள் பற்றியே விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நேற்றிரவு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்திற்குச் சென்று முறையிட்டார்.

(ஐ)


**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

வடமராட்சி மக்களின் நன்மை கருதி

**மீண்டும் K.K.S. கிளினிக்**

*(மந்திகை)*

15.03.2003 சனிக்கிழமை அன்றே

முற்பதிவுகள் இல்லாமல்

யாழ். போதனா வைத்தியசாலையின்

கண், ENT வைத்திய நிபுணர்களால்

கண், ENT வைத்திய ஆலோசனைகள் வழங்கப்படும்.

மேலதிக விவரங்கள் - தகவல்கள்

15.03.2003 உதயனில் வெளிவரும். (15581)

**கணக்கீடு**

A/L 2004

கட்டுப்பாட்டுக் கணக்கு

ஆரம்பம்: நாளை 2.00 p.m.

(15.03.2003)

ஆசிரியர்: S. தவா

B.Com (Hons) (Acc.Spl.)

NEW SCIENCE COLLEGE

Jaffna (15576)

**கணக்கீடு**

A/L 2004

பங்குடமை

ஆரம்பம்: நாளை 7.30 a.m.

(15.03.2003)

ஆசிரியர்: S. தவா

B.Com (Hons) (Acc.Spl.)

NIRU TUITION CENTRE

Kondavil (15575)

**நிறைஞ்சனாஸ்**

பிரபு, வைஜெந்தி நடிக்க

வண்ணத்தமிழ் பாட்டு (ரீலஸ்)

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

ஜக்கிஜான் நடித்த

RUSH HOUR - 2 (C-26838)

**ராஜா** யாழ்ப்பாணம்

"காசி" புகழ் விக்ரம், லைலா, விவேக், வையாபுரி, நாசர்

தில் (ரீலஸ்)

காட்சி நேரம் :10.30, 2.30, 6.30, 9.30

**லக்ஷ்மி** இணுவில்

இளைய தளபதி விஜய், ரீமாசென் நடித்த

பகவதி

தினசரி மூன்று காட்சிகள்

11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

**புதிய ஆரம்பம் 2003.03.19**

**T.A.T.** கணனி சேவை

பஸ் நிலையம் முன்பாக, சுன்னாகம்.

| | |
|---|---|
| ★ தட்டச்சு பிரதி பக்கமொன்றுக்கு | ரூ. 12 |
| ★ ஸ்ரென்சில் கட்டிங் | |
| ✤ தட்டச்சு பிரதிக்கு | ரூ. 25 |
| ✤ கணனி அச்சுப்பிரதிக்கு | ரூ. 40 |
| ★ றோணியோ வேலை, இரு பக்கப் பிரதிகள் 100இற்கு | |
| ✤ தட்டச்சு | ரூ. 135 |
| ✤ கணனி அச்சு | ரூ. 165 |

★ PAGE MAKER, COREL DRAW இல் அனுபவமிக்க பெண் உடனடியாகத் தேவை.

தொடர்பு: T.A.T. கல்வி நிலையம்

அம்பலவாணர் வீதி, உடுவில்.

8.00 a.m. 3.00 p.m.

(15541) 15.03.2003, 16.03.2003 வார நாள்களில் 4.00 மணிக்குப் பின்.

**நாகம்ஸ்** சுன்னாகம்

அர்ஜுன், பூஜா, ரகுவரன் நடித்த

சூரியபார்வை (ரீலஸ்)

காட்சிகள் தினசரி : 11.00, 3.00, 7.00 (பு.நேரம்)

16ஆம் திகதி முதல் வசீகரா


**மூன்றாண்டின் முடிவில் ஓர் உதயம்...!**

மலர்வு 15 - 09 - 1931



உதிர்வு 16 - 03 - 2000

அமரர்

**வைத்திலிங்கம் சிற்றம்பலம் நவரெத்தினம் (V.S.N.)**

திதி: 14.03.2003

*(பாண்டியன்தாழ்வு ருவிங்கிள் ஸ்ரார் நிறுவன ஸ்தாபகர்)*

ஆண்டு மூன்று முடிவுற்றதப்பா!
ஆதையர் இன்னும் மாறவில்லை
மீட்டு வர பாதையேதும் உண்டோ?
மீட்சித்தேன் மனதில் ஓர் உதயம்
வாழ்ந்தீர்களே வையகத்தில் ஓர் வாழ்வு
வரமாட்டீர்கள் ஏகாதசியில் சென்றதனால்
அணையாத ஜோதியே எங்கள் அப்பா!
ஆண்டவன் தாள் சேர்ந்திட ஆராதிப்போம்.

சாந்தி!

*ருவிங்கிள் ஸ்ரார்,*
*173, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு.*
*T.P. 021 - 222 2448 Fax: 021 - 222 2448.*

இல்லாள், மகள், மருமகன், பேரர்களுடன்
மகன் - பாலவினாயகர். (15577)

**கண்ணீர் அஞ்சலி**

**திருமதி கனகசபாபதி நாகரட்ணம்**

எமது கழக நீண்ட கால உறுப்பினரும் பல கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளை திறம்பட தலைமைவகித்து நடத்தி உதவியவருமான க.விசாகரட்ணம் அவர்களினதும், பல்துறைச் செயற்பாடுகளில் எம்முடன் இணைந்து உழைத்து வரும் க.நகுலேந்திரன் (சூட்டி) அவர்களினதும் அன்னை, திருமதி *க.நாகரட்ணம்* அவர்களின் மறைவையொட்டிய துயரில் நாமும் கலந்துகொள்கின்றோம். அமரரது ஆன்மா சாந்திபெற எல்லாம்வல்ல ஞானவைரவப் பெருமானை இறைஞ்சுகின்றோம்.

*கல்லூரி வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

ஜொலி ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகம் (C-26948)

**கண்ணீர் அஞ்சலி**

எங்கள் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளர்

திரு. க. நகுலேந்திரனின் (சூட்டி) அன்புத் தாயார்

**கனகசபாபதி நாகரட்ணம்**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினர்,
தலையாழி அருள்மிகு ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலை.

*தலையாழி, கொக்குவில்.* (15578)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவேஸ்வரி தம்பிஐயா

*(ஓய்வு பெற்ற ஆசிரியை - அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை)*

அச்சுவேலி தெற்கு, சிவசக்தி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி சிவேஸ்வரி தம்பிஐயா நேற்று (13.03.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, மாசிலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் மற்றும் சுந்தரமூர்த்தி, சிவம் ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2003) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அச்சுவேலி தெற்கு முழக்கன் மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.* (சி-26957)

தகவல்: சுந்தரமூர்த்தி (பெறாமகன்)

### திருமதி முத்துத்தம்பி அன்னப்பிள்ளை

மீசாலை கிழக்கைச் சேர்ந்த திருமதி முத்துத்தம்பி அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (13.03.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் அன்பு மனைவியும் ஏரம்பு, பொன்னம்பலம், செல்லத்துரை, காலஞ்சென்ற யோகநாதன் மற்றும் இராசமணி, பொன்னம்மா, அன்னலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் பத்மாவதி, செல்வராணி, மகாலட்சுமி, சிவயோகலட்சுமிதேவி, சதாசிவம், தியாகராசா, காலஞ்சென்ற கோபாலபிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும் ராகுலன், குருகுலன், அமுதா, குமுதா, கீதா, அன்னா, பாரதி, சாதனா, தீபனா, தர்சனா, கௌரிசங்கர், உமாசங்கர், மதிவதி, தர்மலிங்கம், நிரோதரன், துவாரகன், ஹம்சவாகினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஜீலிக்காவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.03.2003) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிற்றம்பலம் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை.* (15582)

தகவல்: பெ.சதாசிவம் *(மருமகன்)*

## தற்போதைய நெருக்கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர். அடுத்தகட்டப் பேச்சைப் பகிஷ்கரிக்கப் போவதாகவும் அவர்கள் என்னிடம் தெரிவித்தனர். இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதற்கு இருதரப்பினரும் நேரடியாகப் பேசவேண்டும் என்று ஆலோசனை தெரிவித்தேன். அடுத்த வாரம் ஜப்பானில் இடம்பெறும் பேச்சுக்களில் இந்தவிடயம் முன்னுரிமை அடிப்படையில் ஆராயப்பட்டு புதிய திட்டங்கள் குறித்து முடிவு செய்யப்படும்.

யுத்தநிறுத்த உடன்பாட்டில் உள்ள குறைபாடுகள் தொடர்பாகவும் அடுத்த பேச்சில் ஆராயப்பட்டு புதிய நடைமுறைத் திட்டங்கள் குறித்துத் தீர்மானிக்கப்படும்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கைக்கான திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடலில் ஆராய்ந்தோம். அத்திட்டங்களை விரைவுபடுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடினோம்.

வன்னியில் நடத்திய பேச்சுக்கள் திருப்தியாக இருந்தன. நாளை தெற்கில் அரசியல் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளேன் - என்றார். (ஐ-3)


**S.P.Enterprises**

*சர்வதேச அழைப்புக்கள் 10/= இலிருந்து 15/= இற்குள்*

எஸ்.பி.என்ரபிறைசஸ் ஸ்தாபனத்தாரின் மங்களகரமான திறப்புவிழா இன்று 14.03.2003 சுபநேரம் 7.00 - 8.00 மணிவரையான நேரத்தில் திறந்து வைக்கப்படவுள்ளது.

மேலதிக விவரங்கள் - 2ஆம் பக்கத்தில்

(பி/26947)



**LIONAIR**

LANKA'S PRIDE IN THE SKY

*யாழ்ப்பாணம் – கொழும்பு – யாழ்ப்பாணம்*

பாதுகாப்பான – சௌகரியமான பயணம்

★ பலாலி விமான நிலையத்திலிருந்து யாழ்.நகருக்கும் யாழ்.நகரிலிருந்து பலாலி விமான நிலையத்திற்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

★ இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பம்பலப்பிட்டி சந்திக்கும் பம்பலப்பிட்டி சந்தியிலிருந்து இரத்மலானை விமான நிலையத்துக்கும் இலவச போக்குவரத்துச் சேவை.

பதிவுகளுக்கு :

லயன்எயர் ரிக்கெற் அலுவலகம்

யாழ்ப்பாணம்

# 1-T, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 0777-733992

(C/26688)


## ஜப்பான் பேச்சுக்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஹெல்கிஸன், அன்ரன் பாலசிங்கத்துடன் சுமார் இருமணிநேரம் பேச்சு நடத்தினார்

அந்தப் பேச்சின் முடிவில் பாலசிங்கம் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசியல் நிலைகுறித்தும் சர்வதேச கடற்பரப்பில் எமது கப்பல் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்ட துயரமான சம்பவம் பற்றியும் அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் ஜப்பான் பேச்சுத் தொடர்பாகவும் பிரதி வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடினோம்.

ஜப்பானில் நடைபெறவிருக்கும் பேச்சுக்களில் அநேகமாகப் பங்குபற்றுவோம் எனக் கருதுகிறேன். என்றாலும் தலைவர் பிரபாகரனுடன் இன்றைய பேச்சுக் குறித்தும் கண்காணிப்புக் குழுத் தலைவருடன் இடம்பெற்ற கலந்துரையாடல் பற்றியும் பேசிய பிறகு இறுதியான முடிவு இன்னும் சில தினங்களில் எடுப்போம்.

கப்பல் தாக்கப்பட்ட பிரச்சினையை நேரடியாக அரச உயர்மட்டத்துக்கு கொண்டுசென்று அவர்களுடன் பேசி ஆக்கபூர்வமான தீர்வைக் காணவேண்டும் என்றும் -

இப்படியான பிரச்சினைகள் இனியும் நிகழாவண்ணம் உறுதிப்பாடுகளை, உத்தரவாதங்களை ஸ்ரீலங்கா அரசிடம் இருந்து பெறவேண்டுமென்றால் அவர்களுடன் நேரடியாகப் பேசுவது தான் நல்லது என்றும் -

பேச்சை பகிஷ்கரிப்பது எதிர்மறையான விளைவுகளைத் தான் ஏற்படுத்தும் என்றும் -

பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆலோசனை வழங்கினார். இக்கருத்தை தலைவரிடம் தெரிவித்து அவருடன் கதைப்போம். அநேகமாக தலைவர் எம்மைப் பேச்சுக்கு அனுப்பி வைப்பார் என்றுதான் நான் கருதுகிறேன்.

கப்பல் தாக்கப்பட்ட விவகாரம் குறித்து கடும் ஆட்சேபத்தை அரசுக்குத் தெரிவித்துள்ளோம்; கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளோம்: இந்தச் சம்பவம் சர்வதேசக் கடற்பரப்பில் ஸ்ரீலங்கா கடற்படையின் ஆளுமைக்குள் இல்லாத பகுதியில் இடம்பெற்றுள்ளது. கண்காணிப்புக் குழுவின் தலையீடு இன்றி சுயாதீனமாகக் கடற்படையினர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனர். இதுபோன்ற பாரதூரமான சம்பவம் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்காக, நோர்வே அரசு, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு, இலங்கை அரசு ஆகிய முத்தரப்புகளுடன் பேசி சில புதிய ஒழுங்கு முறைகளை வகுக்க முடிவு செய்துள்ளோம்.

ஸ்ரீலங்கா ஆயுதப் படையினர் இப்போது பீதியடைந்திருக்கின்றனர். எமது போராளிகள் வன்னிக்கு வரவழைக்கப்பட்டதையடுத்து பதற்ற நிலை அங்கு காணப்படுகிறது. படையினர் இத்தகைய செயலில் ஈடுபடுவதையிட்டு நாம் ஆச்சரியப்படவில்லை.

ஆனாலும், படைகளின் அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்கள் குறித்து நோர்வே அரசுடனும், கண்காணிப்புக் குழுவுடனும் பேசியுள்ளோம். இதன்படி சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அந்த விவரங்களை இப்போது வெளியிட விரும்பவில்லை.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து அழைக்கப்பட்ட போராளிகளுக்கு அவர்களின் பாதுகாப்புக் குறித்தும் இன்றைய நெருக்கடியான சூழ்நிலை குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காகவே வன்னிக்கு அவர்கள் அழைக்கப்பட்டனர். நிலைமை சீரானதும் அவர்கள் மீண்டும் அந்தந்த இடங்களுக்கு அனுப்பப்படுவர்

- இவ்வாறு பாலசிங்கம் தெரிவித்தார். (ஐ-3)

## வெற்றிமனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட ஹெலிகொப்டரில் கிளிநொச்சி மத்திய விளையாட்டுத்திடலில் வந்திறங்கிய ஹெல்கிஸனை புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் அங்கு வரவேற்றார்.

வெற்றிமனைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்த பின்னர் ஹெல்கிஸன புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசினார். சமாதான செயலகத்தில் நடைபெற்ற இந்தப் பேச்சு நண்பகல் 12.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை நீடித்தது.

அன்ரன் பாலசிங்கத்துடன் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அடேல் பாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஹெல்கிஸனுடன் நோர்வேத் தூதர் ஜோன் வெஸ்பேர்க், தூதரக அதிகாரி தோமஸ் ஆகியோர் வருகை தந்திருந்தனர். பேச்சுக்கள் முடிவடைந்ததும் ஹெல்கிஸன் உடனடியாகக் கொழும்பு திரும்பினார். (ஐ-3-8)

## ஜப்பான் பேச்சுக்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கூறியதாவது:-

நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் குழுவினர் நேற்றுக் கிளிநொச்சியில் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தினர். இக்குழுவினர் நேற்று முன்தினம் கண்டியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்து விரிவான பேச்சு மேற்கொண்டனர்.

விடார் ஹெல்கிஸன் புலிகளின் தலைவர்களுடன் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் எழுந்துள்ள சிக்கல், ஜப்பான் பேச்சு நிகழ்ச்சிநிரல் ஆகியவை குறித்து பேசியிருக்கின்றனர். பொருளாதார ரீதியில் அதிகாரப் பகிர்வு, வரி அறவிடுதல் தொடர்பான பேச்சு நடத்துவதற்கு ஏதுவாக எமது ஆலோசனைத் திட்ட நகலையும் நோர்வேக்குழுவினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

புலிகளுடனான பேச்சு, முஸ்லிம்கள் சம்பந்தமாக எப்பொழுது பேசப்படுகிறதோ அப்பொழுது முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகள் கலந்துகொள்வர். யார் கலந்துகொள்வார்கள் என்பதை இப்போது கூறமுடியாது.

புலிகளின் நீதிமன்றங்கள், பொலிஸ் நிலையங்கள் 1994ஆம் ஆண்டுமுதலே இயங்கிவருகின்றன. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதிக் கட்டப்பேச்சில் இவை குறித்து ஒரு தீர்க்கமான முடிவு எடுக்கப்படும்.

அமைச்சர் பீரிஸ் இவ்வாறு சொன்னார். (ஐ-12)


இன்று (2003.03.14) ஆம் நாள் முதல்....

பளை நகரிலும் தன் பணி தொடங்குகின்றது

தமிழீழ வைப்பகம்

உங்கள் வளமான வாழ்விற்கான பல்வேறுபட்ட மேம்பட்ட சேவைகளுடன்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

உங்கள் அருகில் உங்கள் தெரிவில் உங்களிற்காகவே

தமிழீழ வைப்பகம்

BANK OF TAMILEELAM

தமிழீழ வைப்பகம்

தமிழரின் காப்பகம்

(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகிறோம்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.03.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஹெலி வீழ்ந்து நொறுங்கி 11 அமெ. படையினர் பலி!

## நியூயோர்க்கில் சம்பவம்

நியூயோர்க்,மார்ச்14

அமெரிக்க இராணுவ ஹெலி ஒன்று நியூயோர்க் நகரில் வீழ்ந்து நொறுங்கியதில் அதில் பயணம் செய்த 11 படையினர் கொல்லப்பட்டனர்; இரு படையினர் காயமடைந்தனர்.

நியூயோர்க் நகரின் போர்ட் டிரம் என்ற இடத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளத்தில் இருந்து புறப்பட்ட 'பிளக் ஹவக்' ரக ஹெலியே விபத்துக்குள்ளானது. வழமையான பயிற்சிக்காக சென்ற சமயமே ஹெலி விபத்துக்குள்ளானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

விபத்துக்குள்ளானபோது அதில் 13 படையினர் பயணம் செய்துகொண்டிருந்தனர். பனியால் மூடப்பட்ட ஒரு பகுதியிலேயே ஹெலி விபத்துக்குள்ளானது.

விபத்துக்குள்ளான ஹெலி வீழ்ந்து நொறுங்கியது. அதில் இருந்த 11 பேரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மற்றைய இருவரும் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹெலியுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதும் அது பறந்து கொண்டிருந்த பகுதிக்கு உடனடியாக மீட்புக் குழுவினர் அனுப்பப்பட்டனர். ஆனால், அவர்களால் ஹெலியில் இருந்தவர்களுக்குப் பெரியளவில் உதவமுடியவில்லை என்று மீட்புக் குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விபத்துக்கான காரணம் என்ன என்பது குறித்து தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அமெரிக்காவின் இந்த ரக 3ஹெலிகள் கடந்த ஒரு மாதத்துக்குள் வீழ்ந்து நொறுங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## பத்திரிகையாளர்களை பணயக் கைதிகளாக்கிய சீன நபர்!

பீஜிங்,மார்ச் 14

சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள 'ரொய்ட்டர்' செய்தி நிறுவன அலுவலகத்துக்குள் நுழைந்த மர்ம நபர் ஒருவர் அங்கிருந்த பத்திரிகையாளர்களை திடீரென பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்துக்கொண்டார்.

தன் வசம் வெடிகுண்டுகள் இருப்பதாகக் கூறிய அந்த நபர், சுமார் 2 மணிநேரம் அவர்களைப் பணயக் கைதிகளாக வைத்திருந்தார்.

சீன அரசின் ஊழல்கள் குறித்து தான் வழங்கும் பேட்டியை ஒளிப்பதிவு செய்து உலக நாடுகள் முழுவதற்கும் செய்தியாக அனுப்பும்படி அவர் கேட்டார்.

இரண்டு மணிநேரப் போராட்டத்தின் பின்னர் பொலீஸார் எந்தவித அசம்பாவிதங்களும் இன்றி அந்த நபரைக் கைதுசெய்தனர். அப்போது அவரிடம் வெடிகுண்டுகள் எதுவும் இல்லை என்ற உண்மை தெரியவந்தது. பத்திரிகையாளர்களை மிரட்டுவதற்காக அவர் அப்படிப் பொய் கூறியதாகப் பொலீஸார் தெரிவித்தனர். (ம)

# சேர்பியப் பிரதமர் சுட்டுக்கொலை!

பெல்கிரேட்,மார்ச்14


சேர்பியப் பிரதமர் ஸோரான் ஜிண்டஜிக் புதன்கிழமை மாலையில் சுட்டுக்கொல்லப்பட்டார். அரசுக் கட்டட வளாகத்தில் அவரைச் சூழ்ந்து கொண்ட இருவர் வயிற்றிலும் முதுகிலும் சுட்டனர். படுகாயமடைந்த அவர் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அவரது உயிர் பிரிந்தது.

பிரதமரைச் சுட்ட இருவரும் உடனடியாகப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அவரது கொலைக்கு பின் பெல்கிரேட்டை தளமாகக் கொண்டு இயங்கும் பாதாள உலகக் கோஷ்டி ஒன்று உள்ளதாக சேர்பிய அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்தக் கொலையுடன் சுமார் 20 பேர் வரையில் தொடர்பு பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்களில் மிலோசெவிக் ஆட்சியின்போது விசேட பொலீஸ் பிரிவு ஒன்றின் தளபதியாக இருந்தவரும் அடக்கம் என்று கூறப்படுகின்றது.

பிரதமரின் கொலையை அடுத்து துணைப் பிரதமர் நடாஸா மிஸிக் நாட்டில் அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப் படுத்தியுள்ளார்.

முன்னால் கமியூனிஸ் நாடான யுகோஸ்லாவிய குடியரசு கடந்த மாதம் இரண்டாகப பிரிந்தது. ஒன்று சேர்பியாவாகவும் இன்னொன்று மோடன்டெனெக்ரோ என்றும் அழைக்கப்பட்டது.



சேர்பியப் பிரதமர் ஸோரான் ஜிண்ட்ஜிக்

சேர்பியா உருவாகியதும் அங்கு கம்யூனிஸம் அல்லாத ஆட்சியை நிறுவியவர் ஜிண்ட்ஜிக். மேற்கு நாடுகளின் பாணியில் சேர்பியாவையும் உருவாக்குவது அவர் கனவாக இருந்தது. நாட்டில் பொருளாதார சீர்திருத்தங்களையும் ஜனநாயக நடவடிக்கைகளையும் புகுத்தினார்.

இதனால், கமயூனிஸ் ஆதரவாளர்களிடம் இருந்து அதிகளவு எதிரிகள் அவருக்கு ஏற்பட்டார்கள்.

2000ஆம் ஆண்டு நாட்டில் கிளர்ச்சி செய்து அப்போது யூகோஸ்லாவியாவின் அதிபராக இருந்த ஸ்லோபடோன் மிலோசெவிக்கைப் பதவியில் இருந்து அகற்றியவர் ஜிண்டஜிக். அத்துடன் மிலோசெவிக் மீது இனக்கொலைகள் தொடர்பான போர்க் காலக் குற்றச்சாட்டுக்களை ஐ.நா. விசாரிக்கவும் வழிவகை செய்தவர். அப்போது, மிலோசெவிக் கைது செய்யப்பட்டதை ஜிண்ட்ஜிக்கின் சகாக்களே கடுமையாகக் கண்டனம் செய்தனர்.

இதனால், கமயூனிஸ்ட்கள் அவர் மீது கடும் கோபம் கொண்டிருந்தனர். கடந்த மாதமும் அவரைக் கொல்வதற்கு ஒருமுறை சதி முயற்சி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கில் பயிற்சிபெற்றுவரும் வேறு அரபு நாடுகளைச் சேர்ந்த தொண்டர்கள் .

# வைகோவை விடுவிக்கக் கோரி தமிழகத்தில் உண்ணாவிரதம்

## 23 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

சென்னை,மார்ச்14

தமிழகத்தில் பொடா சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட , வைகோ மற்றும் நெடுமாறன் ஆகியோரை உடன் விடுதலை செய்யுமாறு கோரி தமிழ் நாட்டின் அனைத்துக் கட்சிகளும் இணைந்து மாவட்டத் தலை நகரங்களில் எதிர்வரும் 23ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சி சார்பற்ற பொதுமக்களும் இந்த உண்ணாவிரதத்தில் பங்கேற்பர் என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்தார். இது தொடர்பாக சென்னையில் புதனன்று நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தின் பின்னர் பேசியபோதே கருணாநிதி இப்படித் தெரிவித்தார்.

வைகோ, நெடுமாறன் உட்பட பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைவரையும் உடன் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய, மாநில அரசுகளை வற்புறுத்தியும் இங்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ம)



டாக்டர் ராமதாஸ், மற்றும் கருணாநிதி ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கும் காட்சி.

# மிகப் பெரிய வெடிகுண்டு அமெரிக்கா தயாரித்தது!

வாஷிங்ரன்,மார்ச்14

இதுவரை தயாரிக்கப்பட்ட வெடி குண்டுகளிலெல்லாம் பார்க்க மிகப் பெரிய குண்டு ஒன்றை அமெரிக்கா தயாரித்து வெற்றிகரமாகச் சோதித்துள்ளது. குண்டின் நிறை 21ஆயிரம் இறாத்தல்கள் என்று தெரிவிக்கப்பட்டது. இதில் 18 ஆயிரம் இறாத்தல்கள் நிறைக்கு வெடிமருந்து நிரப்பப்பட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிக்கும் போது ஏற்படும் பேரோசை 30 கிலோ மீற்றர் தூரம் வரைக்கும் கேட்கும். குண்டு வெடிக்கும் இடத்துக்கு வெகு அருகில் உள்ளவர்களுக்கு காது செவிடாகக் கூடிய சாத்தியங்களும் அதிகம்.

ஈராக் மீது இத்தகைய குண்டுகள் வீசப்பட்டால், இனி சண்டையே வேண்டாம் சரணடைந்து விடுவோம் என்று ஈராக்கியப் படையினர் நினைக்கக் கூடும் என்று உளவியல் நிபுணர்கள் கருதுகின்றனர்.

நிலத்தடியில் கட்டப்பட்டுள்ள பதுங்கு குழிகளையும் மாளிகைகளையும் தவிடுபொடியாக்கும் வகையில் இந்தக் குண்டின் சக்தி அமைந்திருக்கிறது என்று கூறப்படுகின்றது. குண்டு வீழ்ந்து வெடிக்கும் இடத்துக்கு அருகில் மிகப் பெரிய சேதங்கள் ஏற்படும். எத்தகைய உறுதிவாய்ந்த கட்டடமாக இருந்தாலும் அதனை இந்தக் குண்டு தகர்த்துவிடும்.

சி-130 ரக சரக்கு விமானத்தில் தான் இந்தக் குண்டை எடுத்துச் சென்று வீசமுடியும். விமானத்தில் இருந்து தள்ளிவிட்டதும் பரசூட்டின் துணையுடன் கீழ் நோக்கி விழும் குண்டு, பின்னர் கணனி வழிகாட்டலின் படி பயணித்து குறித்த இலக்கை தேடிச் சென்று துல்லியமாகத் தாக்கும் திறன் வாய்ந்தது.

புளோரிடா மாகாணத்தின் எக்லின் விமானத் தளத்தில் அமெரிக்கா இந்தக் குண்டை வெடிக்க வைத்து சோதனை செய்துள்ளது. மூன்று தடவைகள் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. முதலிரு தடவைகள் வெடி மருந்து இல்லாமலும் கடைசித் தடவை வெடி மருந்து நிரப்பியும் சோதனை நடத்தப்பட்டது.

(ம)

## ஈராக் விவகாரத்தால் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சிக்கல்

# 6 முக்கிய விடயங்களை நிறைவேற்றினால் போரைத் தவிர்க்கலாம் என்கிறது பிரிட்டன்!

நியூயோர்க்,மார்ச்14

ஈராக் தொடர்பான விவகாரத்தால் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பெரும் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கும் வகையில் பிரிட்டன் சில முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளது. அதிபர் சதாம் 6 முக்கிய விடயங்களை உடனடியாக நிறைவேற்றினால் போரைத் தவிர்க்கலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கிடம் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாகவும் அவற்றை அகற்ற மறுப்பதால் அந்த நாட்டின் மீது போர் தொடுக்க வேண்டும் என்றும் அமெரிக்கா கூறிவருகின்றது.

யுத்தத்துக்கு ஐநாவின் அனுமதியைப் பெறும் வகையில் ஈராக்குக்கு எதிரான தீர்மானம் ஒன்றை பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா கடும் முயற்சி செய்து வருகின்றது. அதற்கு பிரிட்டனும் ஆதரவு வழங்கியுள்ளது.

ஆனால், ஈராக் மீது போர் தொடுக்கும் எந்தத் தீர்மானத்தையும் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்து நிறுத்தப் போவதாக ரஷ்யாவும் பிரான்ஸும் கூறிவருகின்றன.

தன் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்றால் பாதுகாப்புச் சபையின் 15 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்களின் ஆதரவு அமெரிக்காவுக்கு வேண்டும். அத்துடன், வீட்டோ அதிகாரமும் பயன்படுத்தப்படாமல் இருக்க வேண்டும். ஆனால், தற்சமயம் அமெரிக்காவுக்கு 4 நாடுகளின் ஆதரவு மட்டுமே இருக்கின்றது.

இதனால், எதிர்வரும் 17ஆம் திகதிக்குள் தன் வசம் இருக்கும் பேரழிவு ஆயுதங்களை ஈராக் அழித்து விடவேண்டும் என்று ஐ.நா. கட்டளையிட வேண்டும் என மிரட்டி வந்த அமெரிக்கா, சற்று இறங்கி வந்து அந்தக் காலக்கெடுவை மேலும் ஒரு வாரம் நீடிக்க முன்வந்துள்ளது.

இருப்பினும், ஈராக் மீது போர் தொடுக்க அனுமதிக்கும் எந்தத் தீர்மானத்தையும் தாம் ஆதரிக்கப் போவதில்லை என்பதில் ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகியன மிகத் தீவிரமாக இருக்கின்றன.

இந்த நிலைமையைச் சமாளிக்க பிரிட்டன் புதிய திட்டம் ஒன்றை முன்மொழிந்துள்ளது. போரைத் தவிர்க்க வேண்டும் என்றால் அதிபர் சதாம் 6 விடயங்களை முக்கியமாக ஆற்ற வேண்டும் என்று அந்தத் திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

☆ தன்னிடம் பேரழிவு ஆயுதங்கள் இருந்தன என்பதை ஒப்புக்கொண்டும் அவற்றைத் தான் அழித்து விட்டதாகவும் தெரிவித்து சதாம் மக்களுக்கு பொது அறிக்கை ஒன்றை வெளியிடவேண்டும்.

☆ ஈராக்கிய விஞ்ஞானிகள் 30 பேரை அந்த நாட்டுக்கு வெளியே வைத்து விசாரிப்பதற்கு ஐ.நாவுக்கு சதாம் அனுமதி வழங்கவேண்டும்.

☆ தன்வசம் இருக்கும் இரசாயன மற்றும் உயிரியல் ஆயுத முகவர்களை ஈராக் சரணடையச் செய்யவேண்டும். இல்லையெனில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

☆ தடை செய்யப்பட்ட ஏவுகணைகள் அனைத்தையும் அழிக்க வேண்டும்.

☆ இரசாயன முகவர்கள் பற்றிய கணக்கு வழக்குகளை வெளியிட வேண்டும்.

☆ தன்னுடைய நகரும் ஆய்வு கூடங்களை ஈராக் ஒப்படைக்க வேண்டும்.

இந்த 6 விடயங்களையும் அதி

(IV பக்கம் பார்க்க)

# வடக்கின் பெரும் கிரிக்கெட் மோதல் இன்று

வடக்கின் மாபெரும் மோதல் (Battle of the North) என்று வர்ணிக்கப்படும் யாழ்.மத்திய கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியவற்றின் கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டம் இன்று ஆரம்பமாகிறது. இப்போட்டி நாளை முடிவடைகிறது. யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டம் இப்போட்டித் தொடரின் 97ஆவது ஆட்டமாகும்.

'வடக்கின் மாபெரும் மோதல்' கிரிக்கெட் போட்டித் தொடரில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 32 ஆட்டங்களிலும் யாழ்.மத்தியகல்லூரி அணி 22 ஆட்டங்களிலும் வெற்றிபெற்றுள்ளன. 34ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளன. எட்டு ஆட்டங்களில் பதிவுகள் இல்லாத காரணத்தால் அந்த முடிவுகள் தெரியவில்லை.

இவ்வாண்டு நடைபெற்ற பாடசாலைகளுக்கிடையிலான கிரிக்கெட் ஆட்டங்களில் யாழ். மத்திய கல்லூரி 9 பாடசாலைகளுடன் விளையாடியது. அனைத்து ஆட்டங்களுமே வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 7 பாடசாலைகளுடன் விளையாடி அனைத்திலும் வெற்றியீட்டியது. இவற்றில் ஐந்து இன்னிங்ஸ் வெற்றிகளாகும்.

நாளை முடிவடையும் வடக்கின் மாபெரும் மோதலின் இறுதியில் ஒவ்வொரு துறைகளிலும் சிறந்து விளங்கிய வீரர்களும் ஆட்ட நாயகனும் தெரிவுசெய்யப்பட்டு பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

இன்றும் நாளையும் காலை 9.30 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். ஒரு தினத்தின் ஆட்ட நேரத்தில் மொத்தம் 105 ஓவர்கள் வீசப்படவேண்டும் என்பது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

(ஒ-9)




**யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியினர்**

அமர்ந்திருப்போர் (இ-வ) கே.எஸ்.முகுந்தன் (பயிற்றுநர், பொறுப்பாசிரியர்), பி.லவேந்திரா, சி.அகிலன் (அணித் தலைவர்), எஸ்.தனபாலன் (அதிபர்), ஈ.எஸ். வில்சன் (அணி உபதலைவர்), ஏ.தனஞ்சயன், வி.எஸ்.பி.துஷிதரன் (விளையாட்டுத் துறை பொறுப்பாசிரியர்

நிற்பவர் மத்திய வரிசை (இ-வ) ரி.மதராஜ், ரி.சி.அன்ட்ரு, ஆர்.பிரதாதீஸன், எம்.மயூரன், எஸ்.கிருஷ்ணகுமார், எஸ்.ரஜீவன்

நிற்பவர் பின்வரிசை (இ-வ) சி.எம்.டினேஷ், பி.சஞ்செயன், எஸ்.சுதன், ஏ.அன்புஜன், பி.சஜிந்தன்.



**யாழ்.மத்திய கல்லூரி அணியினர்**

அமர்ந்திருப்போர் (இ-வ) வி.எஸ்.மகேந்திரன் (விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர்); ஆர்.மதுசன் (அணி உபதலைவர்), வி.ரஜீவ்குமார் (அணித் தலைவர்), கே.இராசதுரை (அதிபர்), எஸ்.கார்த்தீபன், எஸ்.காண்டீபன் (பயிற்றுநர்), ஈ.எவ். ஆர்.ஜெயக்குமார் (பொறுப்பாசிரியர்).

நிற்பவர் மத்திய வரிசை (இ-வ) கே.கார்த்திக், எஸ்.துஷாந்தன், ரி.தினேஷ், எஸ்.விமலகாந், ஆர்.சிவகுமார், ஏ.டியூரன், கே.றொகான், ஏ.ஜசிந்தன்.

நிற்பவர் பின்வரிசை (இ-வ) வி.கபில்தேவ், எம்.யசோதரன், பி.கஜன், கே.கலிஸ்ரன், எஸ்.வாகீசன், எஸ்.சுரேஷ்ராஜா.

# பொன் அணிகளின் போர் ஆரம்பம்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் கிரிக்கெட் அணிக்கும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் கிரிக்கெட் அணிக்கும் இடையேயான 'பொன் அணிகள் போர்' தொடரின் வருடாந்த கிரிக்கெட் ஆட்டம் இன்றும் நாளையும் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகிறது.

பொன் அணிகளின் போரில் 86ஆவது வருடாந்த ஆட்டம் இதுவாகும். சென். பற்றிக்ஸ் அதிபர் வண.பிதா ஜே.பி.ஞானப்பிரகாசம், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயெல் ஏ.விமலேந்திரன் ஆகியோர் 'பொன் அணிகள் போருக்கான' ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். இனறு காலை 9மணிக்கும் நாளை காலை 9.30 மணிக்கும் ஆட்டம் ஆரம்பமாகும். இப்போட்டித் தொடரில் இதுவரை இரு கல்லூரிகளுக்கு இடையேயான 85 கிரிக்கெட் ஆட்டங்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றில் 26 ஆட்டங்களில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் 15 ஆட்டங்களில் யாழ்ப்பாணக் கல்லூரியும் வெற்றிபெற்றுள்ளன. 25 ஆட்டங்கள் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்துள்ளன. 19ஆட்டங்களின் முடிவுகள் பற்றிய பதிவுகள் கிடைக்கவில்லை.

நாளை முடிவடையும் இவ்வருட ஆட்டத்தின் இறுதியில் ஒவ்வொரு துறைகளிலும் சிறந்து விளங்கிய வீரர்களும், ஆட்டநாயகனும் தெரிவு செய்யப்பட்டு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.


(ஒ-9)



**சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர்**

அமர்ந்திருப்போர் (இ-வ) பி.ஜெயக்குமார், (கிரிக்கெட் பொறுப்பாசிரியர்), எஸ். போல்ரன் ஹெஸ்ரன், ஆர்.நிஷாந்தன், ஏ.எல்.கஜீவன், சி.ஆர்.எம்.கிறிஷாந்தன் (அணித் தலைவர்), வண.பிதா ஜே.பி.ஞானப்பிரகாசம் (அதிபர்), ஜீ.செல்வின் லொயிட் (அணி உபதலைவர்), எஸ்.அருண்நாத், ஆர்.விநோதன், எஸ்.சகாயராஜா (விளையாட்டுப் பொறுப்பாசிரியரும் பயிற்றுநரும்).

நிற்போர் (இ-வ) கே.சதீஷ்குமார், எஸ்.கதர்ஸன், பி.அனிஜன், சி.ஆர்.எம். றொஷாந்தன், சி.டி.றொஷிங்ரன், எம்.ஙாஜேந்திரன், எஸ்.எம்.பெலிக்ஸ், ஏ.ஜே.வின்ஸன், பி.நிதர்ஜன், வி.விதுபாலா.



**யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர்**

அமர்ந்திருப்போர் (இ-வ) பி.எல்.மோகனகுமார் (பயிற்றுநர்), என்.எஸ்.செந்தூரன், எஸ்.ஜே.ஏ.நிம்றோ (அணி உப தலைவர்), நோயல் ஏ.விமலேந்திரன் (அதிபர்), எஸ்.எம்.திலீபன் (அணித்தலைவர்), எம்.ரமணன், ஏ.ஜெயராஜன் (உடற்கல்வி இயக்குநர்)

நிற்போர் (இ-வ) எஸ்.செல்வகுமார், எம்.அகிலநாதன், எஸ்.ஜே.நிரோஷன், வை.துஜன், கே.சுகாஷ், வி.நிருபரன், ஜி.கோகிலரமணன், கே.உதயகுமார், ரி.தரணீதரன், எஸ்.தனரன்.

# பனம் வெல்ல உற்பத்தி நிலையங்கள் அமைக்க அபிவிருத்திச்சபை திட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்14

குடாநாட்டில் பனம் வெல்லத்துக்கு ஏற்பட்டிருக்கும் தட்டுப்பாட்டையடுத்து அதன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக வரணி, காரைநகர், ஊர்காவற்றுறை உட்பட 4 இடங்களில் பனம் வெல்ல உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

பனை வெல்ல உற்பத்திக்குத் தேவையான பதனீரை வழங்குவதற்கு அந்தந்தப் பகுதிகளிலுள்ள பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கங்கள் ஒப்புக்கொண்டிருப்பதாகவும் -

எனவே, உற்பத்தியை விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் - பனை அபிவிருத்திச்சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஒ-4)

# இலவச சட்ட ஆலோசனை

வடமராட்சி,மார்ச்14

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட உதவி மன்றத்தைச் சேர்ந்த 50 சட்டத்தரணிகள் கொண்ட குழு தென்பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வருகிறது.

இக்குழுவினர் நாளை சனிக்கிழமை காலை 9.30மணிக்கு கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் சட்டம் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொள்கின்றனர்.

அதனைத் தொடர்ந்து வறுமைக்கோட்டிற்கு கீழ் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கும் மற்றும் சிறுவர், வயோதிபர் மற்றும் ஆதரவற்றோருக்கும் இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குவார்கள்.

சட்ட உதவி மன்றத்தின் யாழ்.மாவட்டக் கிளையும், பருத்தித்துறை, சாவகச்சேரிக் கிளைகளும் இணைந்து இக்கருத்தரங்கையும் இலவச சட்ட ஆலோசனை உதவியையும் ஏற்பாடு செய்துள்ளன.

(ஒ-173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப் பட்ட Made in Japan Sony 2020, 2182, 2102, 1902, 1400 National T.Vக்கள் Sony National FH7, FH10, றேடியோக்கள், வீடியோ டெக் வகை கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 142, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.(15551)

நல்ல நிலையிலுள்ள Road Master CD 200 விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: ச.ஈஸ்வரன், 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். T.P. 0777-484052, 0212223520 (15552)

புதிய D.Freezer விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T.இரட்ணம் (நேவி), உரும்பிராய் இந்துக்கல்லூரி முன் ஒழுங்கை. (15550)

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு உப்புமடச் சந்திக்கு அண்மித்த தாவடி பார்மஸிக்கு முன்பாக பயன்தரு மரங்கள் நிறைந்த 3 பரப்புக்காணி உடனடியாக விற்ப னைக்குண்டு. தொடர்பு: 2222521 (15518)

## கடை வாடகைக்கு

நல்லூர்ப் பகுதியில் சிறிய கடை ஒன்று வாடகைக்கு உண்டு. தொடர்பு: 248, நாவலர் வீதி, இராசாவின் தோட்டச்சந்தி, யாழ்ப்பாணம். T.P. 0777-273620 பிற்பகல் 6மணியள வில் தொடர்பு கொள்ளவும். (15547)

## வாடகைக்கு வீடு தேவை

ஆசிரியர் குடும்பம் ஒன்றிற்கு யாழ் நகர மையப்பகுதியை அண்மித்ததாக வும் பிரதான வீதிகளுக்கு அண்மித்த தாகவும் வாகன தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: T.P. 0777 555938. (15549)

## தவறிவிட்டது

சாவகச்சேரி, கச்சாய் வீதியைச் சேர்ந்த நாகராசா அஜேந்தினி என்ப வரின் விசேட அடையாள அட்டை 23-02-2003 அன்று உரும்பிராய் இந்துக் கல்லூரி பஸ்தரிப்பில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் உரும் பிராய் தெற்கு, செல்வம் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப் படும். (சி-26935)

## வவுனியாவிலிருந்து 34 குடும்பங்கள் யாழ்.வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம்,மார்ச் 14

வவுனியா நலன்புரி நிலையங் களில் வசித்துவந்த 34 குடும்பங்களைச் சேர்ந்த 162 பேர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

வவுனியா மாவட்ட செயலகம் இவர்களை யாழ்.அனுப்பி வைத்திருந் தது. (எ-10)

**OLD BOYS ASSOCIATION**
**ST.PATRICK'S COLLEGE, JAFFNA**
*ST.PATRICK'S DAY - 17TH MARCH 2003*

**PROGRAMME:-**
TRIDUUM:- On 14th-15th&16th at 5.30 p.m.
FESTIVAL MASS ON THE 17th at 7.00a.m.
AT THE COLLEGE CHAPEL
O.B.A.GET - TOGETHER AND TEA AT 4.30p.m.
ON 17.03.2003
AT MATHURAM SQUARE
MEMBERS OF THE O.B.A.
*ARE CORDIALLY INVITED*

NO.59,ST.Patrick's Road, Jaffna. (15558)

HONY.SECRETARY, O.B.A-S.P.C. JAFFNA.


# சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2495536 இருந்து
2513855 வரை
சீட்டிழுப்பு இல. 1383
திகதி 12.03.2003

வெற்றி எண்கள்
09 23 27 38 56
போனஸ் எண்
04

ஜக்பொட் பரிசு
ரூபா.3,287,350/- வெல்லப்பட்டுள்ளது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 3,287,350/- | 3,287,350/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 100,000/- | 100,000/- |
| 4 | 123 | 10,000/- | 1,230,000/- |
| 3 | 5,739 | 500/- | 2,868,500/- |
| 2 | 96,184 | 20/- | 1,923,680/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 09ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 118,003 | 10/- | 1,180,030/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.10,590,560/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா. 1,500,000/-

தொடர் இல. 3492634க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 மார்ச் 15ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர், 34, கந்தப்பசேகரம் வீதி, (பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2501382-9-71
2508564-2-62
2509575-0-59
2506117-5-17
2498976-8-51

PHOENIX O&M



# சென்றல் - சென்.ஜோன்ஸ் அணிகளுக்கிடையே 97 ஆவது


வீ.ராஜீவ்குமார்
(மத்திய கல்லூரி அணித்தலைவர்)


சி.அகிலன்
(சென். ஜோன் அணித்தலைவர்)

"வடக்கின் மாபெரும் மோதல்"
*Battle of the North*

இன்று நடைபெறுகின்ற மாபெரும் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் வீரர்களை வாழ்த்துகிறோம்.

Kotmale

பட்டணங்கள், கிராமங்கள் தோறும்

Kotmale
சுவையூட்டப்பட்ட பால்



ரூபா. 15/- மட்டும்

சொக்கலேட், வெனிலா, சுவைசெறிந்த கொத்மலை பால்

**S.N.T. FARMSHOP**
எஸ்.என்.ரீ. பாம்சொப், யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.
தொலைபேசி: 2882 HOT LINE:- 071 355355



மட்டுவில்
**பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன்**
**பங்குனித் திங்கள் உற்சவம்**

மேற்படி ஆலயத்தின் பங்குனித் திங்கள் உற்சவம் 17.03.03, 24-03-03, 31-03-03, 07-04-03 ஆகிய தினங்களில் காலை 6.00மணிமுதல் மாலை 6.00மணிவரையும் நடைபெறும். உற்சவகால வியாபார நிலையங் களுககான அனுமதி 16.03.2003 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.00மணிக்கு வழங் கப்படும். முழுப்பணத்தையும் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

(15564) சி.சிவகுரு - தர்மகர்த்தா.

---

**திருமறைக் கலாமன்ற** BRITISH COUNCIL

அனுசரணையில்
பிரித்தானியக் கழகம்
வழங்கும்

# பூஜா

ஓராள் அரங்கு – ஆங்கிலம்
(தனி ஒரு பெண்ணின் அளிக்கை)

காலம் : நாளை (15.03.2003) சனிக்கிழமை
நேரம் : மாலை 6.30 மணி
இடம் : *நாவலர் கலாசார மண்டபம்*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(சி-26945)

---

# நாடக ஆற்றுகையாளர்கள் தேவை
## (Drama Performers)

எமது நிறுவனத்தின் துணை நிறுவனமாக இயங்கும் "செயல்திறன் அரங்க இயக்கம்" Active Theatre movement மிதிவெடி கல்வியூட்டல் செயற்பாட்டுக்காக இரண்டு நாடகங்களை புதிதாகத் தயாரித்து யாழ். மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் மேடையேற்றவுள்ளது. இவ்வாற்று கைக்கு நடிகர்களாகப் பங்குபற்ற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிதிவெடி, வெடிபொருள்களால் பாதிக்கப்பட்டவர் களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுதிகதி :- 30.03.2003
வயது எல்லை :- 20 - 35
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
'அருளகம்'
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(C/26942)

---

உ

**யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்**
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
## வருடாந்த பொதுக்கூட்டம்

அன்புடையீர்!

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர் வரும் 29.03.2003 சனிக்கிழமை காலை 10.00மணிக்கு பாட சாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பெற்றோர் கள் (அங்கத்தவர்கள்) அனைவரும் தவறாது வருகைதந்து பூரண ஒத்துழைப்பை நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள் கின்றோம்.

நிகழ்ச்சி நிரல்

1. கடவுள் வணக்கம்
2. தலைவர் உரை
3. சென்றவருட பொதுகூட்ட அறிக்கை
4. வருடாந்த செயற்பாட்டு அறிக்கை
5. பொருளாளர் வருடாந்த அறிக்கை
6. புதிய அலுவலர் தெரிவு
7. பிரேரணைகள்
8. சபையோர் குறிப்புரை
9. கல்லூரிக் கீதம்

தவறாது சமுகம் தருக.

வி.மாணிக்கம் (அதிபர்)
யா/கனகரத்தினம் ம.ம.வி.
யாழ்ப்பாணம்.

பொ.தர்மேந்திரன்
(பொதுச்செயலாளர்)
யா/கனகரத்தினம் ம.ம.வி.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(சி-26941)

---

# D.C.M.
*யாழ்ப்பாணம்.*

வெளிவாரி, யாழ்.பல்கலைக்கழகம்
**B.Com. P - 1**
**G.A.Q. - 1st IN Com. 2004**

விரிவுரைகள் ஆரம்பம்: 15.03.03
சனி { P - I - 6.15
G.A.Q. - I - In.Com - 8.00 }

2004ஆம் ஆண்டுக்கான பதிவுகள் எம்மால் மேற்கொள்ளப்படும்.

(15567)

---

# WANTED
## SALES REPRESENTATIVE
### தேவை - விற்பனைப் பிரதிநிதி

J.L.MORISON SON & JONES (CEYLON) LTD. என்ற பிரபல்யமான கொழும்பு நிறுவனத்திற்கு யாழ்ப்பாணத்தில் வேலை செய்வதற்கு ஆங்கில அறிவுடைய விற்பனைப் பிரதிநிதி தேவை.

தேவையான ஆவணங்களுடன் இன்று (14.03.2003) வெள்ளிக் கிழமை காலை நேர்முகத் தெரிவிற்கு சமுகந்தரவும்.

**THE PENINSULA GROUP**
NO. 127/10, TEMPLE ROAD, JAFFNA.
T.P.: 021-222 3720

(C/26934)

---

# ஆள்கள் தேவை

பின்வரும் வேலைகளில் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

* ஹாட்வெயர் வேலையில் அனுபவம் உள்ள ஒருவர்.
* இரண்டு சில்லு உழவு இயந்திர ஓட்டுநர் ஒருவர்.
* பொதி சுமக்கக்கூடிய ஒருவர்.

உடன் நேரில் வரவும்.

**தேனுஜன் றேட்ஸ்**
*பிரதான வீதி, அச்சுவேலி.*

(15568)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு
07 - 06 - 1951



உதிர்வு
12 - 02 - 2003

## அமரர் இராசையா இரத்தினகோபாலு
*(முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி)*

12.02.2003 அன்று காலமான எமது அன்புக்குரிய குடும்பத் தலைவர் **இராசையா இரத்தினகோபாலு** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14-03-2003) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கு மாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

(இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்)

*'பிருந்தாவனம்',*
*கரணவாய் கிழக்கு, கரவெட்டி.* (15560)

- **குடும்பத்தினர்.**

---

# விளையாட்டு நிகழ்வுகள்

வடமராட்சி,மார்ச்14

உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தி யாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 2மணிக்கு அதிபர் மா.மெய்யழகன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவா ஜிலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-173)

☆ ☆ ☆

பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலை மெய்வன்மைப் போட்டி இன்று பி.ப. 2.15மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் க.இரத்தி னேஸ்வரன் தலைமையில் இடம்பெ றும் இந்நிகழ்வில் வலிகாமம் மேற்கு உதவிப் பிரதேச செயலர் எம்.சிவராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள் கிறார். (ஒ-9)

☆ ☆ ☆

யாழ்.மாவட்டக் கல்வி வலயங்க ளிடையே தெரிவுசெய்யப்பட்ட பாட சாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளில் இன்று யாழ்.துரையப்பா விளையாட்ட ரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொளளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

☆ காலை 8.00மணிக்கு ஆரம்ப மாகும் 16 வயதுப் பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் காரை நகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயமும் மோதுகின்றன.

☆ 18 வயதுப்பிரிவில் நெல்லி யடி மத்திய மகாவித்தியாலயம் எதிர் சாவகச்சேரி இந்துக் கல்லூரி -

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி - ஆகியவை மோதுகின்றன.

☆ பிற்பகல் 2.00மணிக்கு ஆரம்ப மாகும் 16 வயதுப்பிரிவு ஆட்டங்க ளில் வேலணை துரைசாமி மத்திய மகா வித்தியாலயம் எதிர் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம் -

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியால யம் எதிர் கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை - ஆகியவை மோதுகின்றன.

☆ 18 வயதுப்பிரிவில் வேலணை துரைசாமி மத்திய மகாவித்தியாலய மும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி யும் மோதுகின்றன. (ஒ-86)

# 6 முக்கிய விடய....

(1 பக்கத் தொடர்ச்சி)

டர் சதாம் நிறைவேற்றினால் போரைத் தவிர்க்கலாம் என்று பிரிட்டன் தெரி வித்துள்ளது. ஆனால், இவை ஈராக் குக்கு எதிரான புதிய தீர்மானத்தில் உள்ளடக்கப்படமாட்டா என்றும் அது கூறியுள்ளது.

இவற்றை வரவேற்று அல்லது ஆதரித்து அமெரிக்கா எந்தக் கருத் தையும் வெளியிடவில்லை.

பிரிட்டனின் முன்மொழிவுகள் குறித்துத் தாம் ஆராய்ந்து வருவ தாகத் தெரிவித்த ஐ.நாவுக்கான ரஷ் யத் தூதுவர், எப்படி இருப்பினும் ஈராக் குக்கு எதிரான போருக்கு அனுமதிக் கும் தீர்மானத்துக்கு எதிராகத் தம் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்து வோம் என்று கூறியுள்ளார்.

இதற்கிடையில், யுத்தத்தை எதிர் கொள்வதற்கான ஏற்பாடுகளில் ஈராக கும் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. வேறு அரபுலக நாடுகளைச் சேர்ந்த தொண் டர்கள் பல நூற்றுக்கணக்கில் இரா ணுவ முகாமில் பயிற்சி பெற்றுக் தொண் டுள்ளனர். பக்தாத்துக்கு அருகே உள்ள தளம் ஒன்றில் இவர்களுக் குப் பயிற்சிகள் வழங்கப்படுவதை செய்தியாளர்கள் கண்டுள்ளனர். அமெ ரிக்கா போரில் இறங்கினால் அதற்கு எதிராக இவர்களும் களத்தில் குதிப் பார்கள் என்று கூறப்படுகின்றது.


ஐ.நாவின் அனுமதி இன்றி ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டால், அத னால் ஏற்படும் அழிவுகளைப் புனர மைக்கும் பணியில் ஏனைய நாடு கள் ஈடுபடமாட்டா என்று ஐரோப்பிய யூனியன் தெரிவித்துள்ளது. அப்படி நடந்தால் புனரமைப்புப் பணிகள் சிர மம் வாய்ந்ததாக மாறிவிடும் என்றும் அது கூறியுள்ளது.

இந்த விடயத்தில் அமெரிக்க அர சுக்கும் பிரிட்டன் அரசுக்கும் அழுத் தங்கள் அதிகரித்து வருகின்றன. அழுத் தங்கள் காரணமாக தன் கடும் போக் கில் இருந்து பிரிட்டன் பின்வாங்க முயற் சிப்பதாகக் கூறப்படுகின்றது. இதனை அடுத்து, பிரிட்டனின் உதவி இல்லாமலே தாம் போரை நடத்த முடி யும் என்று அமெரிக்கா அறிவித்துள் ளது.

போருக்குப் பின்னரான புனர மைப் பணிகளில் பிரிட்டன் உதவ முடியும் என்று அமெரிக்க பாதுகாப் புத்துறை அமைச்சர் றொனால்ட் ரம்ஸ் பீல்ட் தெரிவித்தார். (ம)

---







உங்களுடைய உணவகங்கள், கூல்பார் மற்றும் சுப்பமாக்கற் போன்றவற்றிற்கு தேவையான, உலகப் புகழ் பெற்ற L.G. மற்றும் HAIER DEEP FREEZER வகைகளை ABANS நிறுவனத்தின் உத்தரவாதத்துடன் பெற்றிட

**LG**

**JAFFNA ELECTRICALS**
Authorised Dealer For
**Abans**

141, POWER HOUSE ROAD, JAFFNA  TEL: 021-222-5766

(C-26931)